விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 32 சனிக்கிழமை (16.08.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 241





நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஞ்சத் திருவிழாவான நேற்று முருகப் பெருமான் திருவீதியுலா வருவதையும் வள்ளி தெய்வானை சமேதராய் மஞ்சத்தில் வீற்றிருப்பதையும் படங்களில் காணலாம். (ஆர்.யூ.பாலமுருகன்)

# தெற்கில் ஸ்திரமற்ற நிலையினை ஏற்படுத்த ஜே.வி.பி. முயல்கின்றது

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

வன்னியைக் கைப்பற்றும் நடவடிக்கை மும்முரமாக இடம் பெற்று வருகையில் பல்கலைக்கழக மாணவர்களைத் தூண்டி விட்டுத் தெற்கில் ஸ்திரமற்ற நிலையினைத் தோற்றுவிக்க ஜே.வி.பி. முயல்கின்றது. இது எந்தவகையில் நியாயமாகும் என்று தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன கேள்வி எழுப்பினார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவக் காவலரண் மீது கைக்குண்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவலர் வீதியில் புகையிரத வீதி சந்திக்கும் இடத்திலுள்ள இராணுவக் காவலரண் மீது நேற்று பகல் 11.30 மணியளவில் கைக்குண்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளில் வந்தவர்களே இத் தாக்குதலை மேற்கொண்டதாக இராணுவத் தரப்புத் தகவல்கள் தெரிவித்தன. எனினும் சேத விபரங்கள் குறித்துத் தகவல்கள் எவையும் வெளியாக (12 ஆம் பக்கம் பார்க்க)

## மின்சாரம் தாக்கி மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டிப் பகுதியிலுள்ள மின்மாற்றிக்குப் பாதுகாப்பு வேலிகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மூவர் மின்சாரம் தாக்கிப் படுகாயமடைந்துள்ளனர்.

சிறுப்பிட்டிக் கிழக்கைச் சேர்ந்தவர்களான எஸ்.சுரேஸ் (வயது-17), என்.ஜெசிந்தன் (வயது-24), எஸ்.சசிதரன் (வயது-26) ஆகியோரே மின்சாரம் தாக்கிப் படுகாயமடைந்துள்ளனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அமுக்க வெடித் தாக்குதலில் இரு அதிரடிப் படையினர் பலி

(அம்பாறை)

அம்பாறையிலுள்ள வேப்பேரிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் அமுக்க வெடியில் சிறப்பு அதிரடிப் படையினரின் பவள் கவச.வாகனம் சிக்கியதில் அதிலிருந்த இரண்டு படையினர் கொல்லப்பட்டனர். ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது, வேப்பேரிக்குளம் பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை விடுதலைப்புலிகளின் அமுக்க வெடியில் சிறப்பு அதிரடிப் படையினரின் பவள் கவச வாகனம் சிக்கியதில் அதில் பயணம் செய்த மூவர் படுகாயமடைந்தனர்.

அன்று காலையிலேயே படையினரின் வரவை எதிர்பார்த் (12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசு–விடுதலைப்புலிகள் மீது அபய ஸ்தாபனம் குற்றச்சாட்டு

(லண்டன்)

அரசாங்கமும் விடுதலைப்புலிகளும் வன்னி மக்களுக்கு உதவுவதற்குப் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்று அனைத்துலக அபய ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.

அபயஸ்தாபனத்தின் இலங்கை விவகார ஆய்வாளர் யோலாண்டா ஃபாஸ்டர் பி.பி.சி. தமிழோசைக்கு இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

விடுதலைப்புலிகள் அரசாங்கப் படைகளுக்கு எதிராகப் பொதுமக்களை மனிதக் கேடயமாகப் பயன்படுத்துவதன் மூலம் சர்வதேச சட்டங்களை மீறி வருகின்றனர். இலங்கை இராணுவ நடவடிக்கைகளுக்கு முட்டுக் கட்டையாக இருக்கும் வகையில் விடுதலைப் புலிகள் மக்களை (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஈ.பி.டி.பி. உறுப்பினர் சுட்டுக்கொலை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு நாவற்குடாவில் நேற்று நண்பகல் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தோழர் அப்பாஸ் எனப்படும் ஆறுமுகம் வரதராஜன் (வயது-28) எனும் உறுப்பினரே சுட்டுக் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுக் காலை (12 ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைத்தீவில் அமைக்கப்படும் புலிகளின் புதிய விமானத்தளம்

(கொழும்பு)

வன்னிப் பெருநிலப் பரப்பை நோக்கி அரச படைகள் பாரிய படை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றபோதும் விடுதலைப்புலிகள் முல்லைத்தீவில் விமான ஓடு பாதை ஒன்றை புதிதாக அமைப்பதில் தீவிரமாக ஈடுபட்டு வருவதாகப் படை வட்டாரங்களை மேற்கோள்காட்டிக் கொழும்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.


அவை மேலும் தெரிவிப்பதாவது, இரணைமடுக்குளத்திற்கு அருகில் விமான ஓடு பாதை ஒன்றை ஏற்கனவே அமைத்த விடுதலைப்புலிகள் தற்போது ஏ-9 வீதிக்குக் கிழக்காகவே தமது புதிய விமான ஓடுபாதையை யும் அமைத்து வருகின்றார்கள் என்று பெயர்குறிப்பிட விரும்பாத உயர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விமானத் தாக்குதல்

(கொழும்பு)



கிளிநொச்சி பகுதியில் இனங்காணப்பட்ட விடுதலைப்புலிகளின் இலக்கொன்றின் மீது நேற்றுப் பகல் 1.10 மணியளவில் தாக்குதல் நடத்தப்பட்டதாக விமானப் படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் ஜனக நாணயக்கார குறிப்பிட்டுள்ளார்.


விமானப் படைக்குச் சொந்தமான எம்.ஐ. 25 ரக ஹெலிகொப்டர்களைப் பயன்படுத்தி இத் தாக்குதல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)









யாழ்.மாநகர சபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வருடந்தோறும் வெளியிடப்பட்டுவரும் 'நல்லைக்குமரன்' பதினாறாவது மலர் நேற்று வெளியிட்டு வைக்கப்பட்டது. யாழ்.மாநகர ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற யாழ்.மாநகர ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் மங்கல விளக்கேற்றுவதையும் ஆணையாளர் மு.செ.சரவணபவ தலைமையுரையாற்றுவதையும் நல்லை ஆதீன முதல்வர், பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா ஆகியோர் ஆசியுரை நிகழ்த்துவதையும், வைத்திய கலாநிதி (திருமதி) ஜெ.கணேசமூர்த்தி அவர்களுக்கு யாழ்.மாவட்ட பிராந்திய ஆணையாளர் திருமதி ப.சிவலிங்கம் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதையும், 'யாழ்விருதை' அரச அதிபர் க.கணேஷ் வழங்குவதையும், மலரை பதிப்பாசிரியர் நல்லையா விஜயசுந்தரம் வெளியிட்டு வைக்க அதனை தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தினர் பெற்றுக் கொள்வதையும், நூல் ஆய்வுரையை சி.சிவசரவணபவன் (சிற்பி) அவர்கள் ஆற்றுவதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: ஆர்.பாலமுருகன்)

# இராணுவத் தளபதி வன்னிக்கு விஜயம்

(கொழும்பு)

இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் சரத் பொன்சேகா தலைமையிலான உயர் மட்ட இராணுவ குழுவொன்று நேற்று முன்தினம் வன்னிக்கு விஜயம் செய்தது. வன்னிக்கு சென்ற இக் குழுவினரை வன்னிக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜகத் ஜய சூரிய வர வேற்றார். அதன் பின்னர் வன்னி இராணுவத் தலைமை யகத்தில் இராணுவ உயர் அதிகாரிகளின் விசேட கூட்டமொன்று நடைபெற்றது.

கள நிலமைகள் தொடர்பாகவும் கடந்த சில தினங்களில் படையினரால் கைப்பற்றபட்ட பிரதேசங்களின் பாதுகாப்பு தொடர் பாகவும் இக்குழுவினர் ஆராய்ந்தனர். அத்துடன் எதிர்காலத்தில் வடக்கை முழுமையாக புலிகளிடம் இருந்து மீட்கும் நடவடிக்கை களின்போதுமேற்கொள்ள வேண்டிய போர் வியூகங்கள் பற்றியும் இச்சந்திப்பின்போது கலந்துரையாடப்பட்டதாக பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது. (எ-5)

**ENGLISH LANGUAGE DEVELOPMENT PROGRAMME**

- A three -month English course for School leavers / Job seekers
- The Course content comprises the four skills in the English Language- Listening, Speaking, Reading & Writing
- Evaluation & Award of certificate at the end of the programme

Commencement: 8th September 2008
Lessons on Weekdays from 2.30-3.30p.m.
Closing Date: 5th September 2008

*English Language Teaching Unit*
*St John's College Jaffna* (C-1409)

# மேர்வின் சில்வாவுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம்

(கொழும்பு)

தொழிற்துறை அமைச்சர் மேர்வின் சில்வாவிற்கு எதிராகப் நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப் படவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சி அறிவித்துள்ளது.

அமைச்சர் மேர்வின் சில்வாவின் அராஜகச் செயல்கள் குறித்து அரசாங்கம் தொடர்ந்தும் மௌனம் சாதித்து வருவதாக ஐக் கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடக வியலாளர் மாநாட்டில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

ஜனாதிபதியோ அல்லது அரசாங்கமோ நடவடிக்கை எடுக் கும் வரையில் காத்திருக்காது, பொறுப்பு வாய்ந்த எதிர்க்கட்சி என்ற வகையில் மேர்வின் சில்வாவிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கத் தீர்மானித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (எ-5)

# மஹோற்சவ கால சிறப்பு சொற்பொழிவு

(யாழ்ப்பாணம்)

ஆவரங்கால் கிழக்கு திருவருள்மிகு புதுவை ஆலடிமுருகன் வருடாந்த மஹோற்சவ கால சிறப்புச் சொற்பொழிவு நிகழ்வுகளில் நாளை ஞாயிற்றுக்கிழ மை முற்பகல் 11.30 முதல் பிற்பகல் 12.30 மணிவரை 'கோபுர தரிசனம் கோடி புண்ணியம்' எனும் தலைப் பில் சிதம்பரநாதன் சசீவனும்,

நாளை மறுநாள் திங்கட்கிழமை 11.30 மணிமுதல் 'தொண்டர்தம் பெருமை பேசவும் பெரிதே' எனும் பொருளில் சைவப்புலவர் நித்தியதசிதரனும் சொற் பொழிவாற்றவுள்ளனர். (ஓ)

**18ஆம் ஆண்டு நினைவஞ்சலி**

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 15 |  | 06 |
| 10 | | 08 |
| 1946 | | 1990 |

அமரர்

**அருளம்பலம் தேவி சிகாமணி**

ஆண்டுகள் 18 சென்றதுவோ அம்மா
அம்மா! தங்கள் சிந்தனையுடன் தான்
வாழ்கின்றோம் தாயே!
தங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல
வல்லிபுர நாதரை பிரார்த்திக்கின்றோம் தாயே

அ.உ.தயகுமார் குடும்பம்
கோண்டாவில்

(1604)

# இன்று ஒரு தகவல்

## எது சொந்தம்

அவசரமாக ஓடிப்போய் பஸ்ஸில் ஏறி... ஒரு இடம் பிடித்து உட்கார்ந்தார் ஒருவர். நடத்துனர் பின்னால் நின்ற படியால் எழுந்துபோய் ஒரு டிக்கெற் வாங்கிக்கொண்டு திரும்பிவந்தார்.

அதற்குள் இன்னொருவர் வந்து இவர் இருந்த இடத்தில் இருக்கப்போனார். "இது என்னுடைய இடம் சார்... என்று சொல்லிக்கொண்டே ஓடிப்போய், தனது பழைய இடத்தில் மறுபடியும் உட்கார்ந்துவிட்டார். இது நாம் தினமும் பார்க்கும் ஒரு காட்சிதான்.

பத்து நிமிஷம் பிரயாணம் செய்வதற்குள்ளேயே அந்த சிற்றை நமக்குச் சொந்தம் என்று நினைக்கிறோம்... பல நாள் வாழ வேண்டிய வாழ்க்கை இது...

அதனால் பார்ப்பதையெல்லாம் தனக்குச் சொந்தமென நினைக்கிறான் பாமரமனிதன். ஒரு பெரிய துறவி... ராஜாவைப் பார்ப்பதற்காக அரண்மனைக்கு வந்தார்.

"என்ன வேண்டும்?" என்று கேட்டார் ராஜா.

பயணிகள் தங்கும் இந்த இடத்தில் தூங்குவதற்கு கொஞ்சம் இடம் வேண்டும்" என்றார் துறவி. ராஜாவுக்கு கோபம் வந்துவிட்டது.

"இது எனது அரண்மனை..." இது பயணிகள் தங்கும் விடுதியில்லை!" என்றார் ராஜா. அந்தத் துறவி ராஜாவைப்பார்த்து, "உங்களுக்கு முதல் இது யாருக்குச் சொந்தம்?" என்றார்.

"இது என் தந்தையுடையது..." என்றார் ராஜா. அவர் இப்பொழுது எங்கே? என்று கேட்டார் துறவி.!அவர் இறந்துவிட்டார். என்றார் ராஜா.

"சரி... அவருக்கு முன் இது யாருக்குச் சொந்தம்?" என்றார்.

அவருக்கு முன் இது எனது பாட்டனாருக்குச் சொந்தம். "அவரும் இப்பொழுது இல்லை" என்றார் ராஜா.

"பார்த்தாயா... அவர்களெல்லாம் இங்கே கொஞ்சக்காலம் தங்கியிருந்து விட்டுப் போயிருக்கிறார்கள். அவ்வளவுதான்... அப்படி இருக்கும்போது இது பயணிகள் தங்கும் இடம் இல்லாமல் வேறு என்ன?" என்று கேட்டார் துறவி.

ராஜா யோசித்தார் புறப்படுவதற்கு முன்கொஞ்சக் காலம் தங்கிவிட்டுப் போகும் இடம்தான் இது என்பதைப் புரிந்துகொண்டார்.

இப்படித்தான் இன்றைக்குப் பலபேர் இருக்கிறார்கள். சொந்தமில்லாததையெல்லாம் சொந்தம் என்று நினைத்துக்கொண்டு சண்டை பிடித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இராமகிருஷ்ண பரமஹம்சர் ஒரு கதை சொல்லியிருக்கிறார் கடவுள் இரண்டு சமயங்களில் சிரிக்கிறாராம்!

மருத்துவர் நோயாளியிடம் "பயப்படாதே... நான் உன்னைக் காப்பாற்றி விடுகிறேன்...!" என்று சொல்லும் போது சிரிப்பாராம். நாம் இந்த ஆளின் வாழ்க்கையை முடிக்கத்திட்டம் போடும்போது, இவன் அவனைக் காப்பாற்ற நினைக்கிறானே!" என்று நினைத்துச் சிரிப்பாராம்.

கடவுளுக்குச் சிரிப்பு வரும் இன்னொரு சந்தர்ப்பம்... அண்ணனும் தம்பியும், அப்பா விட்டுப்போன நிலத்தை இரண்டாகப் பிரித்து, நடுவில் கோடுபோட்டு கோட்டுக்கு இந்தப்பக்கம் என்னுடையது... அந்தப்பக்கம் உன்னுடையது என்று சொல்லும் போதும் கடவுளுக்குச் சிரிப்பு வருமாம்! அவர் நினைப்பாராம் "இந்த இடம் முழுவதும் நம்முடையது. அப்படியிருக்கும் போது இந்த இரண்டு பேரும் என்னுடையது, உன்னுடையது என்று உரிமை கொண்டாடுகிறார்களே...! என்று நினைத்துச் சிரிப்பாராம்...

யோசித்துப்பார்த்தால், நியாயமாகத்தான் தெரிகிறது. இருப்பதையெல்லாம் சொந்தமாக்கிக் கொண்டு அதை எப்படிப் பாதுகாப்பது என்பதிலேயே நம் காலமெல்லாம் கழிந்துவிடுகிறது. ஒருவன் ஊரில் பெரிய வீடுகட்டினான். ஒருநாள் அவன் பட்டணத்துக்கு வந்தான். திடீரென்று ஒருநாள் "உனது வீடு வெள்ளத்தில் அடித்துக் கொண்டு போய் விட்டது என்று ஊரிலிருந்து செய்தி வந்தது.

அவன் கவலைப்படவில்லை... என்னுடைய வீட்டுக்கு எந்த ஆபத்தும் வராது... என்றான். எப்படி அவ்வளவு உறுதியாகச் சொல்கிறாய்?" என்று கேட்டார்கள். "வரும் போது அதைப் பூட்டிவிட்டுத்தான் வந்தேன். இதோ சாவி கூட என் சட்டைக்குள் தான் இருக்கிறது" என்றானாம் அவன்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# நாளை அதிகாலை சந்திர கிரகணம்

(யாழ்ப்பாணம்)

உலகெங்கும் வாழும் மக்களுக்கு பகுதியளவிலான சந்திர கிரகணத்தைப் பார்வையிடும் சந்தர்ப்பம் இன்று கிட்டவுள்ளது.

எவ்வாறாயினும் இலங்கையர்களுக்கு நாளை அதிகாலையிலேயே சந்திர கிரகணத்தை பார்வையிட முடியும் என தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையில் நாளை அதிகாலை 1 மணி 6நிமிடத்தில் இருந்து 4 .15 நிமிடம் வரையிலான காலப்பகுதியளவிலான சந்திரகிரகணம் தென்படும் என கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளரும் ஆதர்சி கிளாக் மத்திய நிலைய ஆலோசகருமான் கலாநிதி சந்திர ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இந்த சந்திர கிரகணத்தை நேரடியாக பார்வையிடுவதனால் பாதிப்புக்கள் எதுவும் ஏற்படாது என அவர் குறிப்பிட்டார். (அ)

# நல்லூர் உற்சவத்தையொட்டிய சொற்பொழிவும் கூட்டுப்பிரார்த்தனையும்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு நடாத்தப் பெறும் ஆன்மீக நிகழ்வுகளில் நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 3 மணிக்கு முருக மந்திரம் எனும் தலைப்பில் ஆசிரியர் லலீசன் சொற்பொழிவாற்றவுள்ளார்.

தொடர்ந்து வடலியடைப்பு இந்து இளைஞர் மன்றம் வட்டுக் கோட்டை வட்டு சிவன் இந்து அற நெறிப் பாடசாலை அச்செழு சிவகாமிஅம்பாள் அறநெறிப் பாடசாலை ஆகியவற்றின் கூட்டுப் பிரார்த்தனையும் இடம்பெறவுள்ளது. (ஓ)

# பிரதமர் பதவிக்கு போட்டியிடப்போவதாக மாவோயிஸ்ட் கிளர்ச்சிக் குழுத்தலைவர் அறிவிப்பு

(காத்மண்டு)

நேபாளத்தில் பல நூற்றாண்டுகால முடியாட்சி ஒழிக்கப்பட்டதை அடுத்து,அங்கு நடக்கவிருக்கும், நாட்டின் முதலாவது பிரதமரைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலில், தான் போட்டியிடப்போவதாக, நேபாள முன்னாள் மாவோயிஸ்ட் கிளர்ச்சிக் குழுவின் தலைவர் கூறியுள்ளார்.

நேபாளத்தில் பல மாதங்களாக காணப்பட்ட அரசியல் முடக்க நிலை முடிவுக்கு வந்துவிட்டதாக மாவோயிஸ்ட் தலைவர் பிரசண்டா கூறியுள்ளார்.

ஒரு தசாப்தகால கிளர்ச்சியில் ஈடுபட்ட இந்த மாவோயிஸ்டுக்களின் கட்சியே, அரசியலமைப்புச் சபையில் மூன்றில் ஒரு பகுதி ஆசனங்களைப் பெற்று, தற்போது நாட்டில் மிகவும் வலுமிக்க அரசியல் சக்தியாக விளங்குகிறது.

ஆனால், புதிய அரசாங்கம் ஒன்றை அமைப்பதில், இந்த முன்னாள் கிளர்ச்சிக்காரர்களுக்கும், மைய நீரோட்ட அரசியல் கட்சிகளுக்கும் இடையே உடன்பாடுஏற்படவில்லை. (அ-6)

# இராசி பலன்

16.08.2008
(ஆடி 32, சனிக்கிழமை)
திருவோணம் பிற்பகல் 2.46 மணிவரை
பூரணை பின்னிரவு 3.20 மணிவரை
இராகுகாலம்-09.5-10.35 மணிவரை
சுபநேரம்-3.05-4.35 மணிவரை
பூரணை விரதம்

| | |
|---|---|
| மேடம் | தொழில் விருத்தி, பிறர் உதவி, போசன நன்மை, முயற்சி கைகூடும். |
| இடபம் | திடீர் பயணம் ,எதிர்பாராத செலவு , பிதாசிந்தை , புதிய திட்டமிடல். |
| மிதுனம் | காரிய தடங்கல்,தர்மம், உடல் நலக்குறைவு, அச்சமான சூழல். |
| கடகம் | பணவருவாய், வாகன வசதி, நல்ல வரவேற்பு, எடுத்த கருமங்கள் கைகூடும். |
| சிங்கம் | சுவாரஸ்யம், தேக ஆரோக்கியம், பகைவரால் நன்மை, காரிய அனுகூலம். |
| கன்னி | வியாபார விருத்தி, மனச்சஞ்சலம், சிறு வியாதி,வேலைச்சுமை. |
| துலாம் | சிந்தனை மிகுதி, உறவினர் சந்திப்பு,ரோக நிலை ,மனப்பயம். |
| விருச்சிகம் | மனோதைரியம்,மாதர் நட்பு, முயற்சி கைகூடும், விருந்துபசாரம். |
| தனுசு | உணர்ச்சி வசப்படல், காரிய தாமதம், பணவிரயம், கௌரவக் குறைவு. |
| மகரம் | வெகுமானம், கௌரவமான நிலை, போசன நன்மை , புதிய முயற்சி. |
| கும்பம் | பிரயாணம், சயனசுகக்குறைவு, முயற்சிதாமதம், உறவினர் மனஸ்தாபம். |
| மீனம் | தனதானிய சேர்க்கை,குடும்ப மகிழ்ச்சி ,காரிய நன்மை,கீர்த்தி அடைதல் |

வளவன்

# செல்வச்சந்நிதியில் மஹோற்சவம்

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 31ஆம்திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் நடைபெறவுள்ளது.

இவ் உற்சவத்தில் 8ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணிக்கு பூங்காவனத்திருவிழாவும் 13ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4மணிக்கும் சப்பறத்திருவிழாவும் 14ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30மணிக்கு தேர்த்திருவிழாவும் மறு நாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ-6)

# தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)


நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தான ஆதரவுடன் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடாத்தும் தெய்வீக இசையரங்கில் இன்று சனிக்கிழமை மாலை5.30மணிமுதல் 6.30மணி வரை செல்வி குமுதா சோமசுந்தரக் குருக்களின் இசைக்கச்சேரி இடம் பெறும்.

அணி செய்யும் கலைஞர்களாக கே.பத்மநாதன் வயலின், எஸ்.துரைராஜா மிருதங்கம், செல்வன் கே.நந்தகுமார் முகர்சின் ஆகியோருடன் கலந்துகொள்ளவுள்ளார். (ஓ)

# விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

"ஏழாலை சைவ சன் மார்க்க நெறிப்பாலர் முன்பள்ளி விளையாட்டு விழா இன்றுசனிக் கிழமை காலை 9மணிக்கு ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை விளையாட்டு மைதானத்தில் தலைவர் திருமதி மல்லிகாரவீந்திரன் தலைமையில் நடைபெறும்இவ் விழாவிற்கு பிரதம விருந்தினராக கோட்டக் கல்விப்பணிப்பாளர் செ.குபேரநாதன், சிறப்பு விருந்தினராக கலாபூசனம் சிவசண்முகவடிவேல் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்." (அ)



ஈழத்துச் சிதம்பரம் (காரைநகர்சிவன் கோயில்) சுற்றுமண்டபுனர் நிர்மாண வேலைகளின் ஆரம்ப நிகழ்வில் ஆலயத்திருப்பணிச் சபையின் வேலைத்திட்டத்திற்கான அறிவித்தலை சிவத்திரு.க.வைத்தீஸ்வரக் குருக்களிடமிருந்து திருப்பணிச் சபையின் உபபொருளாளர். E.S.P நாகரத்தினம் பெறுவதைப் படத்தில் காணலாம்.

# விண்ணப்பம் கோரல்

தேர்தல் திணைக்களத்துக்கு அமைய அடிப்படையில் முகாமைத்துவ உதவியாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கான போட்டிப்பரீட்சை கொழும்பு மற்றும் யாழ்ப்பாணத்தில் நடைபெறும். இப் பதவிக்கு அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் III வகுப்பிற்குரிய சம்பள அளவுத்திட்டத்தின் ஆரம்பதிட்டத்துக்கு அமைவான நாட் சம்பளக் கொடுப்பனவும் உரிய ஏனைய படிக்கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

பரீட்சைக்கட்டணமாக 250 ரூபா செலுத்த வேண்டும். பூரணப் படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்தை பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு, வெளி நாட்டுப் பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை பத்திர முல்லை என்ற முகவரிக்கு 2008.09.22 ஆம் திகதிக்கு முன்பதிவுத்தபாலில் அனுப்ப வேண்டும். இது தொடர்பான மேலதிக விபரங் களை 2008.08.15ஆம்திகதிய வர்த்தகமானியிலோ அன்றி வலம்புரி காரியாலயத்திலோ பார்வையிட முடியும். (ச)

## தாச்சிச் சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மற்றும் வர்த்தக வங்கியின் ஆதரவுடன் யாழ். மாவட்ட தாச்சி விளையாட்டுச் சங்கம் நடாத்தும் 13 ஆவது தாச்சிச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை 3.30 மணிக்கு அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழகம் எதிர் சுதுமலை நாவலர் விளையாட்டுக் கழகமும் பி.ப 4.30 மணிக்கு நவாலி சென்றொக் விளையாட்டுக்கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக்கழகமும் நாளை ஞாயிற்றுக்கிழமை 3.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கோண்டாவில் மறுமலர்ச்சி விளையாட்டுக்கழகம் எதிர் இணுவில் அண்ணா விளையாட்டுக் கழகமும் 4.30மணிக்கு மயிலிட்டி ஒற்றுமை விளையாட்டுக்கழகம் எதிர் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட் டுக் கழகமும் விளையாடவுள்ளது. (ஓ)

## ஓய்வூதியரின் பணம் வழிப்பறி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேசத்தில் என்றுமில்லாதவாறு வழிப்பறி திருடர்கள் அதிகரித்துள்ளனர். கடந்த 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை ஒழுவில் வீதியில் ஓய்வூதியர் ஒருவரை வழிமறித்த திருடர் அவருடைய பணத்தை திருடிச் சென்றதாக தெரியவருகின்றது. (அ-72)

## காந்தி மை ஃபாதர் திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புறநிலை படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் நடைபெற்றுவரும் கல்விசார்/ கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு, இந்திய நெறியாளர் பெரோஸ்கானின் நெறியாள்கையிலும் அனில்கபூரின் தயாரிப்பிலும் உருவான "காந்தி மை ஃபாதர்" திரைப்படம் வீடியோக் காட்சியாக அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது. காந்தியின் மகனின் பார்வையில் காந்தி இங்கு சித்திரிக்கப்பட்டுள்ளார்.

திரைப்படக் காட்சியின் இறுதியில் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம் பெறும் எனவும் ஆர்வலர்கள் அனை வரும் வருகை தந்து பயன்பெறுமாறு புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் பேராசிரியர் இரா சிவச்சந்திரன் தெரிவித்துள்ளார். (ச)

## விசேட பொதுக்கூட்டம்

(சங்கானை)

சங்கானை கரைச்சி மயான அபிவிருத்திச் சபையின் விஷேட பொதுகூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு தலைவர் த. சிவசுப்பிரமணியம் தலைமையில், சங்கானை ஸ்தான அ.மி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் நிர்வாகசபையால் அங்கீகரிக்கப்பட்ட உபவிதியை (யாப்பு) ஆராய்ந்து அங்கீகரித்தல், மற்றும், சபையைப் பதிவு செய்தல் தொடர்பான விடயங்கள் ஆராயப்பட வேண் டியுள்ளதால், மேற்படி மயான, சேமக்காலையில் ஈமச் சடங்கு, நல்லடக்கம் செய்யும் மக்கள் அனைவரையும் கூட்டத்திற்கு சமூகம் தருமாறு அபிவிருத்திச்சபை செயலாளர் செ. குமாரலிங்கம் (க.நீ.) கேட்டுக் கொண்டுள்ளார். (ஓ-15)

# பயங்கரக் கொள்ளைக் கோஷ்டி மானிப்பாய் பொலீஸாரால் கைது

(பருத்தித்துறை)

மானிப்பாய் பொலிஸார் பயங்கர கொள்ளைக் கோஷ்டியொன்றைக் கைது செய்துள்ளதுடன் கொள்ளையிடப்பட்ட பெருந்தொகையான தங்க நகைகளையும் மீட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் இதுதொடர்பாக மேலும் சிலரைத் தேடி வலைவீசியுள்ளனர்.

வடமராட்சிப் பிரதேசத்தில் கொள்ளையிட்ட தங்க நகைகளும் பொலிஸாரினால் மீட்கப்பட்டுள்ளதால் பருத்தித்துறை, நெல்லியடி,வல்வெட்டித்துறைப் பொலிஸ் பிரிவுகளில் தங்க நகைகளை களவு கொடுத்த நகை உரிமையாளர்கள் மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் தங்க நகைகளை அடையாளம் காட்டுமாறு பருத்தித்துறை, நெல்லியடி, வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பதிகாரிகள் பொதுமக்களைக் கேட்டுள்ளனர். (அ-52)

# அரியாலை கிழக்கு நெற்காணிகளை பார்வையிட பன்னிரண்டு வருடங்களின் பின் அனுமதி

12 வருடங்களுக்குப் பின் இவ் வருடம் அரியாலை கிழக்கில் நெற்செய்கைக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ள சுமார் 100 ஏக்கர் நெற்காணிகளைப் பார்வையிடுவதற்கு செய்கையை மேற்கொள்வதற்குப் பதிவுசெய்துள்ள காணிச் சொந்தக்காரர்களும் குத்தகைச் செய்கையாளர்களும் அழைத்துச் செல்லப்பட உள்ளனர்.

இராணுவத்தால் வழங்கப்படும் விசேட அடையாள அட்டை வழங்கி உறுதி செய்யப்பட்டுள்ளவர்கள் மட்டும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இவர்கள் அரியாலை இராணுவ சிவில் அலுவலக இணைப்பதிகாரி தலைமையில் அழைத்துச் செல்லப்படுவர்.

ஆகவே மேற்படி விசேட அடையாள அட்டையைப் பெறுவதற்கு உறுதி செய்யப்பட்டுள்ள அனைவரும் நாளை காலை 9.15 மணிக்கு ஏ9 வீதி (கண்டிவீதி) அரியாலை கிழக்குக்குச் செல்லும் வீதிச் சந்தியில் ஒன்று கூடுமாறு அரியாலை விவசாய சம்மேளன நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

ஒன்று கூடுபவர்கள் தங்களது தேசிய அடையாள அட்டையை தவறாது எடுத்து வருமாறும் அவர்களுக்கான விசேட அடையாள அட்டை அச் சமயம் இராணுவ அதிகாரியினால் வழங்கப்படும் என்றும் விசேட அடையாள அட்டைப் பாவனை சம்பந்தமான ஒழுங்குகளும் விளங்கப்படுத்தப்படும் என்றும் அறிவிக்கப்படுகின்றது. (ஓ)

# உள்ளூராட்சி மன்ற வருமான பரிசோதகர்களுக்கான பிரயாணப்படியை அதிகரிக்கக் கோரிக்கை

வடக்குமாகாண் உள்ளூராட்சி மன்ற வெளிக்கள உத்தியோகத்தர்களான வருமான பரிசோதகர் வருமான மேற்பார்வையாளர்களுக்கு 1988 ஆம் ஆண்டிலிருந்து இன்றை வரையில் வழங்கப்படும் பிரயாணப்படியான ரூபா 120 அதிகரிக்குமாறு இலங்கை உள்ளூராட்சி சேவைகள் தொழிற்சங்க வடக்கு கிழக்கு மாகாணக் கிளை வடக்கு மாகாண பிரதம செயலாளருக்கு கோரிக்கை விடுத்துள்ளது. அக் கோரிக்கைக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, வடக்கு மாகாண மற்றும் கிழக்கு மாகாணம் தவிர்ந்த ஏனைய மாகாண உள்ளூராட்சி மன்றங்களில் வருமான பரிசோதகர், வருமான மேற்பார்வையாளர்களுக்கு வெளிக்கள வேலைகளுக்கான பிரயாணப்படியாக ரூபா 1250-2500 வரை வழங்கப்படுவதைக் காணமுடிகிறது. எனவே இதுதொடர்பாக ஏனைய மாகாணங்களில்நடைமுறையில்உள்ளது போன்று வடமாகாண உள்ளூராட்சி மன்றங்களுக்கும் தற்போதைய வாழ்க்கைச் செலவைக் கவனத்தில் கொண்டு வெளிக்கள வேலைகளுக்கான பிரயாணப்படியை அதிகரித்து வழங்குவதற்கு ஆவன செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன் எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (அ)




# காரைக்கால் சிவன் மணிமண்டப திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

காரைக்கால் சிவன் மணிமண்டப திறப்பு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு, மணிமண்டப செயற்குழுத் தலைவர் ப.தமிழ்மாறன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன், கௌரவ விருந்தினராக யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி அதிபர் ந.யோகராஜன் சிறப்பு விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். அத்துடன் குமர நர்த்தனாலய மாணவிகளின் வரவேற்பு நடனமும், சிவஸ்ரீ ச.ஸ்ரீஸ்கந்தராஜக் குருக்கள், சிவஸ்ரீ சாம்பசிவ சோமசபேசக் குருக்கள், சிவஸ்ரீ கு.சரவணபவக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரையும், ம.தவேந்திரன், திருமதி பிரியதர்சினி வாகீசன் ஆகியோரின் "நிருத்தியார்ப்பணம்", இணுவையூர் குமர நர்த்தனாலய மாணவர்களின் நிருத்தியாச் சலி, லயன் டாக்டர் மூ .பஞ்சலிங்கத்தின் நிறுவுனர் உரையும் இடம்பெறவுள்ளது.

மாலை நிகழ்வுகளில் எழுத்தாளர் கே.எஸ்.ஆனந்தனின் சிறப்புரையும், இணுவில் கலைக்கோயில் அமரகலா நாட்டியாலயம் வழங்கும் நாட்டிய நிகழ்ச்சி, இணுவில் கந்தசுவாமி கோவில் இளந் தொண்டர் சபையினர் வழங்கும் "சத்தியவான் சாவித்திரி" இசை நாடகம், இராமநாதன் நுண்கலைக்கழக தலைவர் கலாநிதி வி.மு.நவரெத்தினம் வழங்கும் இசைவிருந்து ஆகியனவும் இடம்பெறவுள்ளது. (அ)

## கோழிகள் திருட்டு

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேசத்திலுள்ள கரம்பன், நாரந்தனை, செருக்கன்சந்தி, பொன்னாச்சி கடைச் சந்தி ஆகிய இடங்களில் இரவு நேரங்களில் கோழிகள் திருட்டுப் போவதாக கோழிப் பண்ணையாளர்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (அ-72)

## குருளைச் சாரணர் பயிற்சிநெறி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கமும் யாழ்.கல்வி வலயமும் இணைந்து நடாத்தும் குருளைச் சாரணர் பயிற்சிநெறி இன்று சனிக்கிழமை யாழ்.வலயத்தில் நடைபெறவுள்ளது.

புதிதாக குரு ளைச் சாரணர் குழு ஆரம்பிக்கும் பாடசாலைகள் தங்கள் பாடசாலைகளிலிருந்து ஒரு ஆசிரியரை பயிற்சிநெறிக்கு அனுப்பி வைக்குமாறு பாடசாலை அதிபர்களை யாழ்.வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளரும்,யாழ்.மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தின் செயலாளருமான ரி.இராசலிங்கம் அறிவித்துள்ளார். (அ)

## விளையாட்டுப் போட்டி

(பருத்தித்துறை)

புலோலி இளைஞர் கழகமும் புற்றளை சனசமூக நிலையமும் இணைந்து நடாத்தும் புற்றளை சித்தி விநாயகர் முன்பள்ளி விளையாட்டு போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு புற்றளை மத்திய மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் சனசமூக நிலையத் தலைவர் ரீ. பாலகிட்டிணபிள்ளை தலைமையில் நடைபெறுகிறது.

பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ். சந்திரயோகன் பிரதம விருந்தினராகவும் புற்றளை மகாவித்தியாலய அதிபர் எம்.அனந்தீஸ்வரன், போரூட் வடமராட்சி இணைப்பாளர் திருமதி எஸ்.தேவிகாராணி, கிராமசேவை உத்தியோகத்தர் ரீ. சுபேந்திரராஜா ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்துகொள்கின்றனர். (அ-52)

## வேலணையில் நடமாடும் சேவை

பிரதேச வைத்தியசாலை வேலணையில் எதிர்வரும் 22ஆம் திகதி காலை 9.00மணி தொடக்கம் 12.00 மணிவரை ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிப் பகுதிக்குட்பட்ட வைத்திய நிறுவனங்களில் பணிபுரியும் உத்தியோகத்தர்களின் அலுவலகம் தொடர்பான பிரச்சினைகள் வைத்திய நிறுவனம் தொடர்பான பிரச்சினைகள், தேவைகள், ஊர்காவற்றுறை சுகாதார வைத்திய அதிகாரிப் பிரிவிற்குட்பட்ட பகுதியில் காணப்படுகின்ற சுகாதாரப் பிரச்சினைகள் தொடர்பான பொதுமக்களின் முறைப்பாடுகள் தொடர்பாக நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

பிரச்சினைகள் தொடர்பாக அலுவலர்கள் தமது கடிதங்களை தங்களது நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் அன்றைய தினம் கொண்டு வருமாறு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (அ)

## விரிவுரையாளர்களுக்கான நேர்முகப்பரீட்சை

உயர்தொழில் நுட்பவியல் நிறுவனத்தின் விரிவுரையாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை இம்மாதம் 25, 26ஆம் திகதிகளில் கொழும்பில் நடைபெறவுள்ளது. விண்ணப்பதாரிகள் உரிய நேர்முகப் பரீட்சைக்கான அனுமதிப் பத்திரம் பெறாதவிடத்து 78, பலாலி வீதியில் உள்ள அலுவலகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு யாழ். உயர் தொழிநுட்பவியல் நிறுவனப் பணிப்பாளர் ஆர். ஏ. திலகரட்ணம் அறிவித்துள்ளார். (அ)








சாவகச்சேரி மக்கள் கிளையினால் டிறிபேக் கல்லூரியில் ஆரம்பித்து வைக்கப்பட்ட "சிசு உதான அலகு" ஆரம்ப வைபவத்தில் அதிபர் க.அருந்தவபாலனுடன் இணைந்து சாவகச்சேரி மக்கள் வங்கி உதவிப் பொது முகாமையாளர் சு.கென்றி நாடாவெட்டித் திறந்து வைப்பதையும் , அருகில் முகாமையாளர் க.சண்முகலிங்கம் நிற்பதை முதலாவது படத்திலும் , உப அதிபர் திருமதி ஆர்.ஜெ.ராஜூ உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களையும் ஏனைய படங்களில் காணலாம்.

# நோத்முதல் கோபல்லவா வரை 69





### இடைக்காலத்தில் ஏற்பட்ட மாற்றங்கள்

கீழ்மாகாணத்திலே ஏராளமான நெல் வயல்கள் உண்டாயின. கிரகரி அவர்கள் ஆட்சிக்கால முடிவில் எல்லாமாக நாற்பதுக்கு மேற்பட்ட குளங்களும் 164 மதகுகளும் 30இலட்சம் ரூபா செலவில் திருத்தப்பட்டன. நீர்ப்பாசன அலுவல் களைக் கண்காணிப்பதற்காக 1877 ஆம் ஆண்டில் நீர்ப்பாசன சங்கம் ஒன்று ஸ்தாபிக் கப்பட்டது. இதன் கீழ்க் கிளைச் சங்கங்கள் ஸ்தாபிக்கப்பட்டு மாகாணங்கள் தோறும் நீர்ப்பாசன அலுவல்கள் கவனிக்கப்பட்டன. இச் சங்கங்கள் நெல்வரி ஒன்றை விதித்து நீர்ப்பாசன உதவி செய்து வந்தன.

இலங்கையில் புராதன நாகரிகப் பெருமைக்குச் சான்று பகரும் சகல சாதனங்களையும் தன்னகத்தே கொண்டு நிலவும் கொழும்பு நூதனசாலை ஆள்பதி கிரகரி அவர்கள் முயற்சியாலேயே ஸ்தாபிக்கப்பட்டது. அவருக்குக் கலையில் அதிக விருப்பம் . அவருடைய மனைவி யாரும் கலாவிற்பன்னர் என்றே கருதப்பட்டார். ஆனால் அவரது பிரிவால் வாட்டமுற்ற ஆள்பதிக்கு இலங்கையில் தனிமையில் இருக்க மனம் அமைதி பெறவில்லை. எனவே அவர் 1877 ஆம் ஆண்டில் இலங்கையை விட் டுத் தாய் நாட்டுக்கு மீண்டார். மீண்ட கிரகரி அவர்கள் இலங்கையைப் பலமுறை வந்து பார்த்துப் போனதாக அறியக்கிடக்கிறது. ஆள்பதி கிரகரிக்குப் பின்னர் சேர் யேம்ஸ் லோங்டன் ஆள்பதியாய் வந்தார். அவர் குடியேற்ற நாடுகளில் பல ஆண்டுகளாச்சிறு உத்தியோகங்கள் வகித்துப் படிப்படியாக உயர்ச்சி பெற்று ஆள்பதியாக வந்தவர். அவர் காலத்தில் தான் கோப்பிச் செய்கை கைவிடப்பட்டது. அதனால் மனமுடைந்த வெள்ளைக்கார தோட்ட முதலாளிகள் 400 பேர் இலங்கையை விட்டுப் போனார்கள். போகாது இங்கே இருந்தவருள் பலர் கோப்பியைக் கைவிட்டுத் தேயிலை, சிங்கோனா முதலியவற்றைப் பயிராக்கினார்கள்.


வருமானம் வெகுவாகக் குறைந்த காலத்தில் பரிபாலனப் பொறுப் பேற்ற லோங்டன் ஆட்சியைக் கொண்டு நடத்தியமை பாராட்டுதற்குரியதென்று கருதுவாரும் உள். ஆனால் ஒப்சேவர் பத்திராதிபதிபர் பெர்குசன் அவர்கள் ஆள்பதியை வெகுவாகத் தாக்கியே எழுதி வந்தார். முற்றாகு முற்போக்குக் குணம் இல்லாது மூலையில் இருந்து அலுவலக வேலையைச் செய்த பழைய மனிதன் என எழுதினார்.

லோங்டன் காலத்திலே தான் நாவலப் பிட்டியிலிருந்து நானு ஓயா வரை புகை வண்டிப் பாதை அமைக்கப்பட்டது. அதேபோல் களுத்துறை வரையும் நீடிக்கப்பட்டது. அதே காலத்தில் கோப்பித் தோட்டங்கள், தேயிலைத் தோட்டங்களாக மாறத் தலைப்பட்டன. ஆள்பதி லோங்டன் 1883இல் இளைப்பாறித் தாயகம் மீண்ட பின் சேர் ஆதர் கமில்ரன் அவர்கள் ஆள்பதியாக இங்கே வந்தார்.

ஆள்பதி ஆதர் கோடனின் தகப்பனார் பிரித்தானிய முதன் மந்திரியாராய் இருந்த வர். அதனால் இவர் தம் தந்தையாருக்குக் காரியதரிசியாய் இருந்து அனுபவம் பெற்றதோடு இவர் கேம்பிரிச் சர்வ கலா சாலையில் கல்வி கற்று சர்வகலாசாலையின் மாணவர் மன்றத்துத் தலைவராய் இருந்த பெருமையும் அனுபவமும் உள்ளவராய் இருந்தார். இவர் பாராளுமன்ற அங்கத்தவராயும் கடமையாற்றி வெளிநாடுகளுக்குப் பிரதி யாளராயும் சென்றிருந்தார். பின்னர் குடி யேற்ற நாடுகளில் ஆள்பதியாய் இருந்து அனுபவம் பெற்ற் பின் இலங்கைக்கு வந்தார்.

ஆதர் கோடன் வந்த காலத்தில் இலங்கையில் கோப்பிச் செய்கை முற்றாகக் கைவிடப்பட்டு வெள்ளையர் பெருந் தொகையினராய் வெளியேறிவிட்டனர்.

கோப்பிச் செல்வத்தை நம்பி இங்கே அமைக்கப்பட்ட வங்கியும் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டன. வங்கி முற்றாக மூடப்பட்டதால் அதில் முதலீடு செய்து பத்திரம் நோட்டுகள் பெற்றிருந்தவர் கலகஞ் செய்யும்போது ஆள்பதி கோடன் நிலைமையை விளக்கி வங்கியின் பணம் 30 இலட்சம் ரூபாவை அரசாங்கமே மாற்றிக் கொடுக்க நிலைமையைச் சீராக்கி னார். இவ் வங்கி மூடப்பட்ட மையால் காசுப் புழக்கத்துக்காக இலங்கை அரசாங்கம் 1-1-1885 தொடக்கம் ரூபாத் தாள்களை அச் சிட்டு வழங்கத் தொடங்கிற்று.



தேயிலைத்தோட்டம்: கோப்பிப் பயிர்ச்செய்கை தொற்று நோய் காரணமாக அழிவுற்றதன் பின்னர் தேயிலைப் பயிர்ச்செய்கை பிரதான பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையாக மாறியதுடன், 1896 ஆம் ஆண்டளவில் தேயிலைப் பயிர்ச்செய்கை செய்யப்பட்ட நிலப்பரப்பு 330,000 ஏக்கர்களாகும். அவ்வருடத்தில் ஏற்றுமதி மூலம் கிடைத்த வருமானம் மொத்த ஏற்றுமதி வருமானத்தின் 2/3 பங்கிற்கும் அதிகமானதாகும்.(BRITISH LIBRARY-1770)

ஆள்பதி கோடன் அவர்கள் தேயிலைத் தோட்டங்களின அபிவிருத்திக்குப் போதிய ஆதரவும் உதவியும் கொடுத்தார்.

அவர் தாமே நேரில் பல தோட்டங்களைச் சென்று பார்த்தும் ஆவன செய்தார். தோட்ட முதலாளிகள் அவர் தம் தொழிலாளருக்கு நல்ல சம்பளம் கொடுக்காத சமயங்களில் அவர் களை வெகுவாகக் கண்டித்து அவர் தம் பகைமையையும் தேடிக் கொண்டதும் உண்டு.

(தொடரும்)



**சேர் பொன்னம்பலம் இராமநாதன்**
அரசியலமைப்பு சபையில் உத்தியோக சார்பறற தமிழ்ப் பிரதிநிதியகக் க்டமையாற்றியுள்ளார்.




**டி.பி.பாணபொக்க**
1889-1895 வரை சட்ட வாக்கச் சபையில் கண்டிச் சிங்களவர்களை பிரதிநித்து வப்படுத்திய உத்தியோக சார் பற்ற உறுப்பினராவார்.



**மொகமட் மாக்கன் மாக்கர்**
இவர் அரசியலமைப்பு சபையில் முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்திய உத்தியோகப் பற்றற்ற பிரதிநிதியாவார்.

**க.சி.குலரத்தினம்**

# கோப்பாய்ப் பிரதேசத்தின் இன்றைய கல்விநிலை 5



க. பொ.த உயர் தர வகுப்பு க்கான அனுமதித் தகுதி பெற்றோரின் எண்ணிக்கை குறித்த பகுப்பாய்வை விட தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திலும் சித்தி பெற்றோர் வீதம் குறித்த பகுப்பாய்வு மேலும் பல தகவல்களையும் தரிசனத்தையும்

அட்டவணை 8 கணிதப் பிரிவு க.பொ.உயர்தரம்

| பாடசாலை பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோ.எ. | சித்தியடைந்தோர் எ. | சித்தி% |
| இடைக்காடு மாகாவித்தியாலயம் | 9 | 1 | 11.11 |
| கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி | 4 | 1 | 25.00 |
| புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி | 10 | 4 | 40.00 |

அட்டவணை 9 விஞ்ஞானப் பிரிவு க.பொ.உயர்தரம்

| பாடசாலை பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோ.எ. | சித்தியடைந்தோர் எ. | சித்தி% |
| இடைக்காடு மாகாவித்தியாலயம் | 5 | 3 | 60.00 |
| கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி | 4 | 0 | 0.00 |
| புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி | 4 | 2 | 50.00 |
| உரும்பிராய் இந்துக்கல்லூரி | 2 | 1 | 50.00 |

எமக்கு தரக்கூடும்.ஆனால் இவ்வகையான பகுப்பாய்வுக்கு பல்வேறு காரணிகள் குறித்த மேலதிக தரவுகள் அவசியமாவை. இக்கட்டுரையின் விரிவு கு றித்த தயக்கத்தினாலும் பாட ரீதியான பகுப்பாய்வு இங்கு தவிர்க்கப்படுகின்றது.

ஆயினும் பாட ரீதியான பகுப்பாய்வுக்கு மிகவும் பிரதாணமாக அமையக்கூடிய ஆசிரிய வளத்தின் ஓர் அம்சம் குறித்த தரவுகள் இப் பகுப்பாய்வின் சிக்கற் தன்மையையும் விரிவையும் எடுத்துக்காட்டக்கூடும் என்ற

அட்டவணை 7 கோட்ட ரீதியாக யாழ்ப்பாண வலயத்தின் ஆசிரியவளம்

| கோட்டம் | பட்டதாரி ஆசிரியர் | பயிற்றப்பட்ட ஆசிரியர் | பயிற்றப்படாத ஆசிரியர் | பயிலுநர் | வேறு வகையினர் | ஆசிரியர்களின்மொத்த எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| யாழ்ப்பாணம் | 306 | 378 | 17 | 2 | 1 | 704 |
| நல்லூர் | 307 | 449 | 15 | 0 | 2 | 773 |
| கோப்பாய் | 199 | 398 | 31 | 1 | 5 | 634 |

வகையில் அட்டவணை 7 இல் தரப்படுகின்றன.

கோப்பாய் கோட்டத்தில் ஏனைய கோட்டங்களை விட பயிற்றப்படாத ஆசிரியர்களின் எண்ணிக்கை உயர்வாக இருப்பினும் பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கை தாழ்வாக இருப்பதும் நோக்கத்தக்கன அதே வேளை கோப்பாய் கோட்டப் பாடசாலைகளில் 109 வெற்றிடங்கள் நிரப்பப்படாதிருப்பதும் யாழ்ப்பாணக் கல்விவலய அலுவலகப் புள்ளி விபரங்களிலிருந்து அறியக்கிடக்கிறது.

தனித்தனியாகஒவ்வொரு பாடத்துக்கும் பொருத்தமான ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்களா எனவும் இவர்கள் தகுந்த முன் பயிற்சிகளையும் பணியிடைப் பயிற்சிகளையும் பெற்றுக் கொண்டனராணவும் பரிசீலிக்கும்போதேஆசிரியவளம் குறித்த மேலதிக தகவல்களைக் குறிப்பிட முடியும். ஆயினும் கோப்பாய் கோட்டத்தில்ஆசிரியர்தேவைகள் (Teacher requirements) பூர்த்தியாகவில்லை என்பது இத் தரவுகளிலிருந்து புலனாகின்றது.

### க.பொ.த உயர்தரப் பரீட்சை

அட்டவணை 10 வர்த்தகப் பிரிவுக.பொ.த.உயர்தரம்

| பாடசாலை பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோ.எ. | சித்தியடைந்தோர் எ. | சித்திவீதம் |
| அத்தியார் இந்துக்கல்லூரி | 5 | 3 | 60.00 |
| இடைக்காடு மகாவித்தியாலயம் | 2 | 1 | 50.00 |
| கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி. | 13 | 10 | 76.92 |
| புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி | 14 | 10 | 71.43 |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி | 4 | 3 | 75.00 |
| சென் திரேஸா பெண்கள் கல்லூரி | 6 | 4 | 66.67 |

அட்டவணை 11 கலைப்பிரிவு க.பொ.த.உயர்தரம்

| பாடசாலை பெயர் | 2007 | | |
|---|---|---|---|
| | தோ.எ. | சித்தியடைந்தோர் எ. | சித்திவீதம் |
| அச்சுவேலி மகா வித்தியாலயம் | 28 | 25 | 89.29 |
| அத்தியடி இந்துக்கல்லூரி | 28 | 20 | 71.43 |
| இடைக்காடு மகாவித்தியாலயம் | 18 | .14 | 77.78 |
| கோப்பாய் கிறிஸ்ரியன் கல்லூரி | 83 | 66 | 79.52 |
| புத்தூர் சோமாஸ்கந்த கல்லூரி | 70 | 55 | 78.57 |
| உரும்பிராய் இந்துக் கல்லூரி | 38 | 23 | 60.53 |
| சென் திரேஸா பெண்கள் கல்லூரி | 17 | 14 | 82.35 |

கோப்பாய் கல்வி கோட்டத்தின் க.பொ.த . உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகளின் பகுப்பாய்வானது விரிவாக நோக்கப்படுவது இங்கு அத்துணை அவசியமானதன்று.

ஏனெனில் யாழ்ப்பாணம், நல்லூர் ஆகிய கல்விக் கோட்டங்களுடன் ஒப்பிடும் போது கோப்பாய் கோட்டத்தில் குறைந்தளவு எண்ணிக்கையான மாணவர்களே க.பொ.த உயர்தர பரீட்சைக்குத் தோற்றியுள்ளனர் ஆரம்பக்கல்வி, இடைநிலைக்கல்வி ஆகியன வளம் பெறுகின்ற போதே க.பொ.த . உயர்தர வகுப்புப் பரீட்சைப் பெறுபேறுகள் சிறக்க முடியும். ஆயினும் வகை மாதிரிக்காக கோப்பாய் கல்விக் கோட்டத்தில் 2007 ஆம் ஆண்டுக்குரிய க.பொ.த. உயர் தரப்பரீட்சைப் பெறுபேறுகள் மட்டும் பிரிவுரீதியாக (stream wise) அட்டவணை 8,9,10,11ஆகியவ ற்றில்த ர ப்பட்டுள்ளன.

இந்த அட்டவணைகளின் தரவுகளிலிருந்து கோப்பாய் கல்விக் கோட்டத்தில் கணிதம், உயிரியல் பாடநெ றிகளில் பிரிவுகளில் சித்தி வீதம் குறைவாக இருப்பதையும் கலை வ ர்த்தகப் பிரிவுகளில் சித்தி வீதம் உயர்வாக இருப்ப னவும் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கிறது. (தொடரும்)

**கலாநிதி த.கலாமணி**
சிரேஷ்ட விரிவுரையாளர்,
கல்வியியற் துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

# வெற்றிலையை தாக்கும் அழுகல் நோயும் தடுப்பு முறைகளும்


தமிழர் கலாசாரத்துடன் பின்னிப்பிணைந்தும் சமய சடங்குகளில் முக்கிய இடத்தைப் பிடிக்கும் பயிர்களில் ஒன்றாகவும் வெற்றிலை விளங்குகிறது. அது மட்டுமல்லாது குறைந்த மூலதனத்தால் நிறைந்த செல்வத்தை விவசாயிகளுக்கு. வழங்கும் இலக்ஷ்மிகரமான பயிராகவும் இது விளங்குகின்றது.

பண்டைய காலம் தொட்டு யாழ். குடாநாட்டில் கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், இளவாலை, மயிலங்கூடல் மற்றும் கருகம்பனை ஆகிய இடங்களில் பரந்த அளவில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டு வந்தது. ஆயினும் யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் இடம் பெயர்ந்தமையாலும் இவ்விடங்களில் பெரும் பகுதி உயர்பாதுகாப்பு வலயமாக்கப்பட்டமையாலும் வெற்றிலை பயிர் செய்யப்படும் அளவு குறைந்திருந்தாலும் தற்போது யாழ்ப்பாணத்தின் அனைத்து இடங்களிலும் வீட்டுக்கு வீடு பூங்கன்றோடு வெற்றிலைக் கொடியும் நடப்பட்டு வருகின்றமையால் நுகர்வோரின் தேவையைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் செய்கை பண்ணப்படும் பரப்பளவு ஏறத்தாழ 12கிலோ. எனினும் கடந்த சில வருடங்களாக வெற்றிலைக் கொடியை இலை மற்றும் கீழ்தண்டு அழுகல் நோய் கடுமையாக தாக்கி வருகின்றது. இந்நோயானது மனிதரில் புற்றுநோய் போல முற்றாகக் குணப்படுத்த முடியாததாகவும் இறுதியில் கொடியானது முற்றாகப் பட்டுப் போகும் அளவிற்கு வீரியமானது எனவும் பல விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பல்லாண்டுத் தாவரமாக விளங்கும் வெற்றிலையில் பாரிய பின்னடைவை ஏற்படுத்தும் இந்நோயை சாதாரணமாக தட்டிக் கழிக்க முடியாததென்பதாலும் விவசாயத்தில் எப்போதும் நோய் வருமுன்னரான தடுப்பு முறை நோய்க் கட்டுப்பாட்டை விட சிறந்ததென்பதாலும் (வருமுன் காப்போம்) வெற்றிலைச் செய்கையுடன் தொடர்புபட்ட அனைவரும் இந் நோயை உண்டாக்கும் காரணிகளையும், நோய்த் தாக்கங்களையும், அறிகுறிகளையும், அதற்குள்ளேயே தடுப்பு முறைகளையும் அறிந்திருத்தல் அவசியம்.

நோய்க்குரிய காரணிகளை எடுத்து நோக்கும் போது பைற்றப்தோறா பரசிற்றிக்கா (Phytophora Parasitica) பைற்றப்போறா பாமிவோறா (Phytophthora Palmiuora) ஆகிய பூஞ்சணங்களால் தோற்றுவிக்கப்படுகிறது. இது 60-100 வீதமான



விளைச்சல் இழப்பை ஏற்படுத்தக்கூடியதான கடுமையான நோயாகும். கொழும்புக் கொழுந்தில் இந்நோயின் தாக்கம் உர்க் கொழுந்தை விட அதிகமாக காணப்படுகிறது. ஆயினும் நமது விவசாயிகள் கொழும்புக் கொழுந்து பராமரிப்பு இலகு என்பதால் அதையே விரும்பி பயிரிடுகின்றனர்.

வெற்றிலையின் அனைத்துப் பருவங்களும் இந்நோயின் தாக்கத்திற்கு உள்ளாக்கப்பட்டாலும் கிள்ளுப்பருவத்திலும் அதற்கு சற்று கூடிய வளர்ச்சிப்பருவத்திலும் நோயின் தாக்கம் அதிகமாக காணப்படுகிறது.

### நோய் பரவல்

பொதுவான மழை காலத்தில் (புரட்டாதி தொடக்கம் தை மாதம் வரை) நோய் தோன்றுகின்றது. எனினும் மார்கழி மாதத்தில் நோயின் தீவிரம் அதிகமாக காணப்படுகிறது.

பூஞ்சணங்கள் முளைத்து வளருவதற்கு சாதகமான காலநிலையாக மாரிகாலம் விளங்குவதாலும், மழை நீரின் மூலமாக வித்திகள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு இலகுவாக பரவக்கூடியதாக இருப்பதாலும் நோயுற்ற பகுதிகளிலிருந்து பூஞ்சண வித்திகள் நீரின் மூலம் சிதறுவதாலும் அதிக தாக்கத்திற்கு வெற்றிலைக் கொடி உள்ளடக்கப்படுகின்றது. ஏனைய காலப் பகுதியில் நீர்ப்பாசனத்தின் மூலமும் இலகுவில் நோய் பரவக் கூடியதாக இருக்கிறது.

இதற்கும் அதிகமாக பூஞ்சணங்கள் தகாத காலத்தை கழிப்பதற்கு உறங்கு நிலையிலுள்ள வித்திகளை தோற்றுவிப்பதால் இவை மண்ணில் நீண்டகாலம் உயிர் வாழ்ந்து சாதகமான சூழ் நிலை வரும் போது நோயை ஏற்படுத்தும் வல்லமையுடையன. நோயுற்ற பகுதிகளில் இவை இனக்கலப்பு வித்திகளான ஊஸ்போர்களை (oospores) உருவாக்குகிறது.

இவ் வித்திகள் மண்ணுடன் கலந்து நீண்ட காலத்திற்கு நோயை ஏற்படுத்தக் கூடியதாகவுள்ளது.

சேப்பங்கிழங்கு எனப்படும் தாவரமும் இப்பூசணத்திற்கு மாற்று விருந்து வழங்கியாக தொழிற்படு கின்றது.

### நோய் அறிகுறி

◆ ஆரம்பத்தில் மண்ணிலுள்ள பூஞ்சணங்கள் கீழ்த்தண் டுப்பகுதி யை தாக்குவதால் சாறு நிரம்பிய பசுமையான தண்டுகள் பழுப்பு நிறமாக மாறிட உடையக் கூடிய உலர்ந்த படி போல் மாறுகிறது.



நோயுற்ற கொடியில் இடைக் கணுப் பகுதியில் ஈர அழுகல் அறிகுறிகளை காணலாம். ஈர அழுகலில் இழையங்கள் மென்மை அடைந்து அழுகி எஞ்சியுள்ள நார் போன்ற இழையங்களை வெளியே காட்டும். கணுப்பகுதிகள் படிப்படியாக கருமை நிறமாக மாறி அழுகி இற்று விடுவதால் இலகு வாக பிடுங்கக் கூடியதாக காணப்படுகிறது. நோயுற்ற கொடிகள் இரண்டு அல்லது மூன்று நாட்களில் முற்றுமுழுவதுமாக காய்ந்து விடும்.

◆ நோயுற்ற கொடிக்கும் மண்ணுக்கும் அருகேயுள்ள பகுதியிலுள்ள இலைகளின் வட்டமான அல்லது ஒழுங்கற்ற வடிவமான தண்ணீரில் நனைந்தது போன்ற புள்ளிகள் காணப்படும். பின்னர் இப்புள்ளிகள் மஞ்சள் திட்டுக்களாக மாறி நாளடைவில் மண்ணிறமாக மாறி அழுகி சிதைந்து விடுகின்றது.

### தடுப்பு முறைகள்

◆ கொழுந்துகளை நடுவதற்கு 0.5% போர்டோக் கலவையில் மூழ்வைத்து எடுத்து நடுவதாலும், பின்னர் அக்கலவையை இவற்றை நட்ட ம்ண்ணில் ஊற்றுவதனாலும் இந்நோயை கணிசமான அளவு தடுக்கலாம்.

◆ வேப்பம் புண்ணாக்கு, வேப்பிலை, எருக்கலை இலை என்பவற்றை மண்ணுக்கு இடுதல் இதன் மூலம் நூற்பு பூக்களில் தாக்கமும் குறைவடையும்.

◆ சுப்பர் பொஸ்பேற் உரத்தை ஏக்கருக்கு 600kg வீதம் கலப்பதனால் நோய் ஏற்படுவது குறைகிறது. அத்துடன் தொழு உரத்தை பயன்படுத்துவதாலும் இந்நோய் வருவதை தடுக்கலாம்.

◆ நோயுற்ற கொடிகளை கவனமாக வேருடன் பிடுங்கிட வெற்றிலைத் தோட்டங்களிலிருந்து துப்புரப்படுத்தி அழிக்க வேண்டும். ஒருபோதும் நோயுடைய வெற்றிலைக் கொடியை கிடங்குகளில் புதைத்தல் ஆகாது. இலை அழுகல் அறிகுறிகளையுடைய வெற்றிலையை அகற்றி எரித்தல் வேண்டும். ஏனெனில் இவற்றில்தான் ஊஸ்போர்ஸ் உருவாகின்றன.

அதிக நிழல்படுவது தவிர்த்தல் வேண்டும் அத்துடன் கொடிகளை ஐதாக்கல் வேண்டும்.

**திருமதி கியெந்தி ஷேத்திரபாலன்,**
விவசாய உயிரியல் சிறப்பு மாணவி,
தகவல் தொடர்பு மையம்,
விவசாயபீடம், யாழ்.பல்கலைக்கழகம்

# மேல்நாட்டு மரக்கறிப் பயிர்களில் உற்பத்தி செலவைக் குறைக்கும் தொழில்நுட்பங்கள்

யாழ்.குடாநாட்டில் கடந்த பல தசாப்தங்களாக மேல்நாட்டு மரக்கறிப் பயிர்ச் செய்கை முக்கிய இடம்பிடித்துள்ளது. ஆனால் சூழல் வெப்பநிலை அதிகரிப்புக் காரணமாகவும், கண்மூடித்தனமான இரசாயனங்களின் பிரயோகங்களாலும், விளைபொருட்களின் தரம் பாதிக்கப்பட்டுள்ளதுடன் உற்பத்தித் திறனும் குறைவடைந்துள்ளது.

மேலும் அபரிமிதமான நச்சுபாவனை காரணமாக நுகர்ச்சியாளர்களும் பெருமளவில் பாதிப்படைகின்றனர். இவ்வாறான பிரச்சினைகளிற்குத் தீர்வுகாணும் நோக்குடனும் எதிர்காலத்தில் யாழ். குடாநாட்டில் மேல்நாட்டு மரக்கறிப் பயிர்ச்செய்கையின் தரமான உற்பத்திப் பொருட்களை குறைந்த செலவில் உற்பத்தி செய்யும் நோக்குடனும், மேல்நாட்டு மரக்கறிச் செய்கையில் புதிய தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையத்தில் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### தூவல் நீர்ப்பாசனத்தின் கீழான பயிர்ச் செய்கை முறை

இந் நடவடிக்கை மூலம் குறைந்தளவு நீருடன் கூடியளவு நிலப்பரப்பில் செய்கை மேற்கொள்ளமுடியும்.அத்துடன் நிலத்தடி நீர் பாதுகாக்கப்படுகிறது.

பயிர்களிற்கு தேவையான சாதகமான நுண்கால நிலைமையும் தோற்றுவிக்கப்படுகின்றது. இந் நடவடிக்கை மூ லம் வரட்சியான காலங்களில் பயிர்களிற்குச் சேதத்தை ஏற்படுத்தும் பனிப்பூச்சிகளின் பெருக்கம் குறைக்கப்படுகின்றது.

இதனால் கறி மிளகாயில் இலைக் குருமன் தாக்கம் வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது. தரமானதும் கவர்ச்சிகரமானதுமான விளைவினைப் பெற்றுக் கொள்ள முடியும். அத்துடன் கூலியாட் செலவும் குறைக்கப்படுகின்றது.

தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் பீற்றூட்செய்கை



### கலப்புப் பயிர்ச்செய்கை

கோவாவில் பெரும் சேதத்தை ஏற்படுத்தும் டைமன் முதுகு அந்தை முகாமைத்துவம் செய்வதற்காக கோவா,தக்காளி கலப்புப் பயிராக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கோவா, முள்ளங்கிப் பயிர்களில் தாக்கத்தை ஏற்படுத்தும் தெள்ளு வண்டை முகாமைத்துவம் செய்வதற்காக வெங்காயம் கலப் புப் பயிராக செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் டைமன் முதுகு அந்து, தெள்ளுவண்டு ஆகியவற்றின் தாக்கங்கள் வெற்றிகரமாக பொருளாதார எல்லை மட்டத்தின் கீழ் முகாமைத்துவம் செய்யப்பட்டுள்ளது.

டைமன் முதுகு அந்துப் பீடையை வெற்றிகரமாக முகாமைத்துவம் செய்வதற்குரிய கோவாப் பயிர்களுடன் தக்காளி கலப்புப் பயிர்ச்செய்கை



### எல்லைப் பயிர்ச்செய்கை

கறிமிளகாயில் தாக்கத்தை ஏற்படுத்தும் இலைக்குருமன் நோய்க்காவியான பனிப்பூச்சியின் குடித்தொகையை முகாமைத்துவம் செய்வதற்காகக் கறிமிளகாயைச் சுற்றி சோளம் எல்லைப் பயிராக செய்கை பண்ணப்பட்டுள்ளது.

இதனால் பனிப்பூச்சிகளின் தாக்கம் வெற்றிகரமாக குறைக்கப்பட்டுள்ளது.

### வேப்பம் பிண்ணாக்கு நடுகைக் குழிக்கு இடல்

கரட் ,பீற்றூட் போன்ற பயிர்களின் விளைவில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் விலாங்குப் புழுவை முகாமைத்துவம் செய்வதற்காக நடுகைக் குழிக்குள் அடிக்கட்டுப் பசளையுடன் வேப்பம் பிண்ணாக்கு இடப்பட்டது.

தூவல் நீர்ப்பாசனத்தின் கீழ் வரட்சியான காலத்தில் . லீக்ஸ், சலாது, நோக்கோல் பயிர்கள் வெற்றிகரமாக செய்கை பண்ணப் பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி மலைநாட்டு மரக்கறிகளான கோவா, முள்ளங்கி, நோக்கோல் , கரட் பீற்றூட், கறிமிளகாய் லீக்ஸ் சலாது ஆகிய பயிர்கள் வெற்றிகரமாக செய்கை பண்ணப் பட்டுள்ளது.

மேல்நாட்டுப் பயிர்ச்செய்கையில் வினைத்திறனான தொழில்நுட்ப முறைகளைக் கையாள்வதன் மூலம் உற்பத்திச் செலவைக் குறைத்துக் கொள்வதுடன் இச்செய்கையில் சிறந்த தரமான விளைச்சலைப் பெற்றுக் கொள்வதற்கான பார்வை நிலையமாகவும் நற்செய்தித் தகவல் மைய நிலையமாகவும் இக் கண்காட்சியானது அமைகின்றது.

**சி.சிவகுமார்**
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

கறி மிளகாயைச் சுற்றி சோளம் எல்லைப் பயிர்ச்செய்கை



# உங்கள் கடவுள் உங்கள் உள்ளே தான் வாசம் செய்கிறார்-மகராஜி

நாம் நமது நாளாந்த வாழ்வில் பலவற்றைக் கேட்கிறோம், பலவற்றைப் பார்க்கிறோம், அவற்றில் சில விடயங்கள் நம்மைச் சிந்திக்கத் தூண்டுகின்றன. வாழ்விலே உன்னதமான ஒரு மாற்றத்தினை ஏற்படுத்துகின்றன. இவ்வாறு பல இலட்ச மக்கள் தமது வாழ்வில் ஆனந்தத்தையும் அமைதியையும் உணர்வதற்கு உதவி புரிபவர் தான் மகாராஜி என்று கௌவரப்பெயரால்



அழைக்கப்படும் பிறேம் ராவத் அவர்கள். அவர் கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக உலகெங்கும் பயணம் செய்து மக்கள்நிறைவை அடைவதற்கான சாத்தியத்தை வழங்கி வருகின்றார். அவரின் உரையில் இருந்து சில துளிகளை உங்களுக்காக இங்கே வழங்குகின்றோம்.

ஒரு பானையிலே தண்ணீர் உள்ளது. அந்தப்பானையில் மேலே சூடான தண்ணீர் என எழுதி ஒட்டப்பட்டுள்ளது. அந்தத் தண்ணீர் உண்மையிலேயே சூடானது என்பதற்கு என்ன அத்தாட்சி? உங்களது விரலால் தொட்டுப்பார்ப்பிர்கள் அது தான் அனுபவம். தொட்டுப் பார்த்து அனுபவித்த பொழுதுதான் அந்தப் பானையில் உள்ள தண்ணீர் சூடானது என்பது நமக்குத் தெரிய வருகின்றது. அதன் மேலே ஒட்டப்பட்ட போப்பரை அகற்றினாலும் அது சூடானது என்று நமக்குத் தெரியும். யாரவாது நம்மை முட்டாள் ஆக்குவதற்காக தண்ணீர் குளிரானது என எழுதினால்நாம்அதனைநம்ப வேண்டிய அவசியம் இல்லை. அது போல் எதுவரை மனிதன் அனுப விக்க வில்லையோ அதுவரை அவன் எழுதி உள்ளதில் , மற்றவர்கள் கூறுவதில் நம்பிக்கை வைக்கவேண்டி இருக்கும். ஆனால் என்று மனிதன் தானே அனுபவம்செய்கிறானோ அப்பொழுது அவன் மற்றவர்கள் கூறுவதில் எழுதப்பட்ட விடயங்களில் படித்து அல்லது கேள்விப்பட்ட விடயங்களில் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசி யம் இருக்காது. ஏனெனில் அவன் தனது வாழ்வில் அதனை அனுபவம் செய்துள்ளான். அது தான் அனுபவம்.

மலரின் உள்ளே நறுமணம் உள்ளது போன்று. கஸ்தூரி மானின் வையிற் றிலே கஸ்தூரி உள்ளது போன்று , உங்களது கடவுள் உங்களின் உள்ளேயே உள்ளார். நீங்கள் எதனைத் தேடுகின்றீர்களோ அது உங்களிள் உள்ளேயே உள்ளது. வெளியே அல்ல எனச் சொல்லப்பட்டுள்ளது. இதனை நாம் அனுபவத்தில் உணர்ந்து கொள் ளவேண்டும். நம்புவது மட்டுமல்ல அனுபவம் செய்யபின்னர், அதனை நம்பலாம். உலகத்திலே மக்கள் அதனை அனுபவத்தில் உணராமல் எழுதிய விடயத்தை நம்புவார்கள். மக்களிடம் கேட்டால் சிலர் இது போன பிறவியில் செய்ததன் பலன் என்பார்கள். போன பிறவி பற்றி மக்கள் பேசுவார்கள் ஆனால் நீங்கள் இப் போது உயிர் வாழ்கிறீர்கள் என்ன நடைபெறுகின்றதோ அதை இந்தப் பிறயில் நடைபெறுகின்றது. ஆனால் மக்களின் கவனம் போன பிறவியைப் பற்றி எண்ணுகின்றது.

அடுத்த பிறவி பற்றி எண்ணுகின்றது. அது எவ்வாறெனில் நீங்கள் ஒரு புகையிரதத்தில் இருக்கின்றீர்கள். இதன் முன்னர் சென்ற புகையிரதம் எங்கேசென்றது என்றோ அல்லது அடுத்த புகையிரதம் எங்கே செல்லும் என்றோ எண்ணுவீர் களா? இல்லை. நீங்கள் இருக்கும் புகையிரதம் எங்கே செல்கிறது என எண்ணுவீர்கள். இந்த புகையிரதம் எங்கே செல்கிறது? உங்களின் உள்ளே வந்து போகும் மூச்சு எங்கே செல்கிறது?

கடவுளின் கிருபையினால் இந்த மூச்சு வருகின்றது. எந்த வித முயற்சியும் இல்லாமலே மூச்சு வருகின்றது. ஆனால் யாரும் அதனைவிட்டு அக்கறைப்படுவதில்லை. வருகின்றது போகின்றது யாருமே அதனை பொருட்படுத்துவதில்லை. ஆனால் என்று நிரந்தரமாக போக ஆரம்பிக்கிறதோ அப்பொழுது தான் அதனைப்பற்றி எண்ணுவார்கள். நான் எதனைப்பார்த்திருக்கின்றேன் கடைசி மூச்சு எடுக்கப்போராடும் பொழுது கவனம் வேறு ஒன்றிலும் செல்வதில்லை. முழுக்கவனமும் மேலும் ஒரு மூச்சை எடுப்பதில் தான் இருக்கும். கடவுள் அருளால் இந்த மூச்சு வந்து போகின்றது. இந்த அருளை நம் வாழ்வில் நாம் ஏற்றுக் கொள்ளாவிடின் வேறு எதனை ஏற்றுக்கொள்ளப்போகின்றோம்?

ஞான வழி முறை என்றால் என்ன? நம்உள்ளே உள்ள சக்தியை நமக்கு அறிய வைப்பது தான் ஞான வழி முறை. அது நம்மை அனுபவிக்க வைக்கிறது. ஏனெனில் அனுபவம் செய்யவில்லை என்றால் எல்லாம் வெறும் கற்பனை தான். அனுபவம் செய்யாதவரை நாம் இந்தப் பொருள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள மாட்டோம். காலம் காலமாக மக்கள் இந்த உலகத்தைப் புரிந்து கொள்ள முயற்சி செய்கிறார்கள் சிலர் சந்திரனுக்குச் சென்றால் நாம் இதனைப் புரிந்து கொள்ளலாம் என்பார்கள். சிலரோ புதன் கிரகத்துக்குச் சென்றால் நாம் இவற்றை எல்லாம் புரிந்து கொள்ளலாம் எனச் சொல்வார்கள். சிலரோ சமுத்திரம் அடியில் சென்றால் புரிந்து கொள்ளலாம். என்பார்கள் இவ்வாறு எல்லா இடங்களிலும் சென்றுதேட நாம் தயாராக உள்ளோம். ஆனால் நம் உள்ளே உள்ள உலகத்தினுள் செல்வதற்கு நாம் எப்பொழுதாவது எண்ணுகின்றோமா ஆனால் நம் உள்ளே உள்ள உலகத்தினுள் செல்லவில்லை என்றால் நாம் செய்வது எல்லாம் வீணாகப் போய் விடும். நாம் எங்கு சென்றாலும் சரி உள்ளே உள்ள விடயத்தைப் புரிந்து கொள்ளாவிடின் அதனால் என்ன பலன்? நாம் யார்? உங்களுக்கு உங்களது நண்பர்களைத் தெரியும். உங் களது உறவினர்களைத் தெரியும். ஆனால் உங்களுக்கு உங்களைத் தெரியும்? நீங்கள் யார்? உங்களது வாழ்விலே நீங்கள் எதனைப் பெற்றிருக்கிறீர்கள்? இந்த வாழ்வில் எதனைச் சேமித்து வைத்திருக்கிறீர்கள்? உண்மையிலே இந்த வாழ்க்கை ஒரு கோப்பை என்றால் அதனுள் எதனைப் போட்டுள்ளீர்கள்? இந்தக் கோப்பையினுள்ளே என்ன உள்ளது? இந்தப் பாத்திரத்தினுள் சூதுவாது உள்ளது என்றால் அதனால் ஒரு பலனுமில்லை. இதனுள் அறியாமை உள்ளதென்றால் அதனால் ஒரு பலனும் இருக்காது ஆனால் இந்த பாத்திரத்தினுள் உண்மையான அன்பு உள்ள தென்றால் உண்மையில் இந்தப் பாத்திரம் அன்பினாலே ஒளி வீசும். இந்தப்பாத்திரத்தினுள் அமைதி, நிம்மதி இருந்தால் அது அந்த அமைதியினாலே ஒளி பெறும். இந்தக் கோப்பையினுள் என்ன வைத்திருக்கிறீர்கள்? மக்கள் வேறு விடயங்களைப் பற்றி பேச விரும்புகிறார்கள் நான் உங்களது வாழ்வைப் பற்றி கூற விரும்புகிறேன். உங்களது இந்த வாழ்வைப் பற்றி கூறவிரும்புகிறேன் அடுத்த பிறவியில் என்ன நடைபெறும் என்பது பற்றி நான் பேசுவதில்லை. நீங்கள் மிகவும் வயிற்று வலியால் அவதிப்பட்டு ஒரு வைத்தியரிடம் செல்கிறீர்கள் அவர் உங்களுக்கு மருந்து கொடுத்து இதனைச் சாப்பிடுங்கள். அடுத்த பிறப்பிலே எல்லாம் சரியாகி விடும் என்று கூறினால் நீங்கள் அந்த வைத்தியருக்கு என்ன கூறுவீர்கள் ? வைத்தி யரே அடுத்த பிறப்பைப் பற்றி பேசாதீர்கள் எனக்கு இப்பொழுது வயிற்று வலி இருக்கின்றது. எனக்கு இப் பொழுதே வயிற்று வலியைக் குணப் படுத்தும் மருந்து வேண்டும் என கூறுவீர்கள். மனிதனின் வாழ்வில் அமைதியற்ற தன்மை உள்ள தென் றால் அந்த அமைதி, அந்த நிம்மதி இப்பொழுதே கிடைக்க வேண்டும் இறந்த பின்னர் அல்ல உயிர் வாழும் பொழுதே கிடைக்க வேண்டும் மக்கள் இறந்த பின்னர் சொர்க்கம் கிடைக்கும் எனக் கூறுவார்கள்.

இப்பொழுது இங்கே உள்ள சொர்க்கத்தைக் கண்டுகொள்ள முடியாவிடின் இறந்த பின்னர் எவ்வாறு கண்டு கொள்ளப் போகிறீர்கள்? இறந்த பின்னர் எவ்வாறு நன்றி உணர்வை வெளிபடுத்தப் போகிறீர்கள் ? உங்களின் உள்ளே மிகப் பெரும் கருணையினால் வந்து போகும் மூச்சை எவ்வாறு அறிந்து கொள்ளப்போகிறீர்கள்? இந்த உலகில் பொருட்களை விலைக்கு வாங்க முடியும் ஆனால் இந்த மூச்சை விலைக்கு வாங்க முடியாது இந்த மனிதவாழ்க்கை மிகப் பெரும் அருளினால் கிடைத்துள்ளது.

இந்த அருளை நாம் அறிந்து கொள்ளா விடின் இதனை நாம் ஏற்றுக் கொள்ள முடியாவிடின் இதனை நாம் நமது வாழ்வில் உணராவிடின்சொல்லப்பட்டதுபோல்வெறுங்கையுடன் வந்து வெறுங்கையுடன் தான் செல்ல வேண்டியிருக்கும். மகராஜியின் செய்திவெறும்வார்த்தைகள் அல்ல ஆர்வமுள்ளவர்களுக்கே அவர்நம்உள்ளே உள்ள அமைதியை அனுபவிக்கும் வழியைக் கற்றுக் கொடுக்கின்றார்.

**நி.சரவணபவன்**

**அவர் வழங்கும் இந்த வழி முறையைப் பெறுவதற்கு திறவு கோல்கள் எனும் டிவிடி-க்களைப் பாப் பதன் மூலம் ஒருவர் தன்னைத்தயார் செய்து கொள்ளலாம். மகராஜியையும் அவர் வழங்கும் ஞான வழி முறை பற்றி மேலும் அறிந்துகொள்ள விரும்புபவர்களுக்கான ஒரு அறிமுக வீடியோ நிகழ்ச்சி இன்று காலை 10 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறுகின்றது.**

# பௌர்ணமி தின கலை விழா


(யாழ்ப்பாணம்)

குலனையூர் கலைவாணி இந்து மாமன்றம் நடாத்தும் பௌர் ணமி தின கலை விழா அராலி இந்துக் கல்லூரி மண்டபத்தில் இன்று சனிக் கிழமை பி.ப.1.30 மணிக்கு கலைவாணி இந்துமாமன்ற தலைவர் ச.அனுசுயன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக சங்கானை, வலிமேற்கு பிரதேச செயலக கலாசார அபி விருத்தி உத்தியோகத்தர் பொ.சந்திரவேல் , சிறப்பு விருந்தினராக அராலி இந்துக்கல்லூரி அதிபர் வே.மோகனநாதன், கௌரவ விருந்தினர் களாக கிராம சேவையாளர் ஜே.கதிர்காமநாதன் , சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி சிவகுமார் உதயமலர், வைத்திய கலாநிதி செ.பரமசிவம் பிள்ளை ஜே.பி., சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கிருஷ்ண பிள்ளை சிவானந்தன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கலை நிகழ்ச்சிகளும் காத்த வராயன் சிந்து நடைக்கூத்து நாடகமும் இடம்பெறும்.(ஓ)

## நல்லூரான் திருவடிக்கு இன்று பதினொராம் திருவிழா



## சிரம் தாழ்த்தி கரம் கூப்பி சிந்தையிலே நினைக்கின்றோம்

நலம் நாடி தினம் தேடி நல்லூர் வருகின்றோம்.
குலம் காக்க அருள் தந்து குற்றங்கள் களைந்திடையா
சிரம் தாழ்த்தி கரம் கூப்பி சிந்தையிலே நினைக்கின்றோம்
வரம் தந்து வாழ்வளித்து வையகத்தை காத்திடையா

*இ.புராதனி மானிப்பாய்.*

## நல்லூரானே அபயம்

நல்லூர் கந்தா நலம் பல புரிந்த கந்தா
சொல்லால் வடிக்க முடியாத நம் மக்கள் சீரழிவை அறியாயோ
கல்லாப்போன இதயத்தாரை உன் அருளால் கனியவைத்து
நல்லார் ஒருவர் பொருட்டேனும் மணங்கொள்ளாயோ
காத்திட

*ந.கா. தங்கராசா புலோலி.*

## அள்ளி அணைத்திடவே வா முருகா

வள்ளி கணவா உனை வாயார வாழ்த்துகின்றோம்
புள்ளி மயில் வாகனனே – உன்
புன்னகைக்காய் ஏங்குகின்றோம்
எள்ளி நகையாடும் எத்தர்களை நீ அழிப்பாய்
துள்ளி வரும் வேலாலே துயர்களை நீ நீக்கிடுவாய்
பள்ளி கொள்ளும் மாலவனின்
மருமகனே திருமுருகா உனை
அள்ளி அணைத்திடவே
ஆசை கொண்டோம் வா முருகா

*எஸ். கே. மனோகரன் சுன்னாகம்.*

## வாழ வழிகாட்ட வரம் தாருமய்யா !

நல்லையம்பதி உறையும் நாயகனே
நமக்கருள் புரிந்திட வேண்டுகிறோம்
தொல்லைகள் யாவும் துடைத்திடவே
தோன்றினாய் முகங்கள் ஆறுடனே
எல்லையில்லாத இன்பம் அளித்திடவே
ஏறுமயில் ஏறிவந்து அருளுவாயே
இன்னலுற்று வாழும் எம்மக்களுக்கு
என்று தான் விடிவு கிடைக்குமோ?
வந்தனை செய்து உன்னைத் துதி செய்தோம்
வாழ வழிகாட்ட வரம் தாருமய்யா!

*செல்வநாயகம்ரவிசாந்*
*(புதுமைக்கவி) குப்பிளான்.*

## அருள் பெருக அபயம் தருவான்

நல்லைத் திருவூரின் நாயகனை
நாளும் நாம் பணிந்தால்
எல்லை மீறி வரும் துயரெல்லாம்
எங்கேயோ ஓடி விடும் வள்ளி தெய்வயானை நாயகனை
வர மீயும் வேலவனை
அல்லும் பகலும் தொழுதால்
அச்சம் அகன்று விடும்
அருள் பெருகி விடும்.

*மதுரகலாவித்தியா*

## கந்தனென வந்தருளும் கருணைத்தெய்வம்

சிந்தனையில் நின்று வக்கும்
தமிழின் தெய்வம்
சீலமுடை அடியாரில் வாழ்
சிந்தைத் தெய்வம்
கந்தன் என வந்தருளும்
கருணைத் தெய்வம்
காதலிப்பார்க்கருள் சுவட்டும்
நல்லைக் குமரேச தெய்வம்

*யாழ் .கவிநவம்*

# முல்லைத்தீவு மாவட்டத்தில் மூன்றில் ஒரு பங்கு மாணவர் உயர் தரப்பரீட்சைக்கு தோற்றவில்லை

## வலயக் கல்விப் பணிப்பாளர் தெய்வேந்திரன் தெரிவிப்பு

(கொழும்பு)

முல்லைத்தீவு மாவட்டத்திலிருந்து 762 மாணவர்கள் க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றுவதாக இருந்த போதிலும் 500 பேர் வரையில் மாத்திரமே தற்போது பரீட்சை எழுதிவருவதாக முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எம். தெய்வேந்திரன் தெரிவித்துள்ளார்.

அங்குள்ள நிலைமை குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

துணுக்காய், மல்லாவிப் பிரதேசங்களில் நிலவுகின்ற போர்ச்சூழல் காரணமாக இடம் பெயர்ந்துள்ள மக்கள் பாதுகாப்பன இடங்களைத் தேடி நாளாந்தம் நகர்ந்து கொண்டிருக்கிறார்கள். ஒரு நாளைக்கு ஒரு இடம் என அவர்கள் இடத்திற்கு இடம் சென்று கொண்டிருக்கிறார்கள். இதனால் மாணவர்களும் ஓரிடத்தில் இருந்து பாடசாலைக்குச் சென்று கல்வி கற்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் 25ஆயிரம் பாடசாலை மாணவர்கள் இருக்கின்றார்கள். இவர்களுக்கெனத் துணுக்காய் கல்வி வலயத்தில் 54 பாடசாலைகளும், முல்லைத் தீவு கல்வி வலயத்தில் 53 பாடசாலைகளும் இருக்கின்றன. ஆயினும் துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த 37 பாடசாலைகள் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக இடம் பெயர்ந்து இருக்கின்றன. கல்வி பொதுத் தராதரப் பரீட்சைக்கான நிலையங்கள் சிலவற்றையும் வேறிடங்களுக்கு நாங்கள் மாற்றியுள்ளோம்.

இடம் பெயர்ந்த பாடசாலைகளின் முக்கிய ஆவணங்களை மாத்திரம் அந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் பாதுகாப்பான இடங்களுக்கு எடுத்துச் சென்றுள்ளார்கள். ஏனைய பொருட்கள் தளபாடங்கள், பாடசாலை உபகரணங்கள் அனைத்தையும் அந்தந்த இடத்திலேயே நாங்கள் விட்டுவிட்டு வந்துள்ளோம். அவற்றுக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை கடந்த 6ஆம் திகதி ஆரம்பமாகியது. அன்றைய தினம் பிற்பகல் மாணவர்கள் பரீட்சை எழுதிக் கொண்டிருந்த போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் நடத்தப்பட்ட விமானக்குண்டுத் தாக்குதல்கள் காரணமாக மாணவர்கள் அச்சமடைந்து பரீட்சை மண்டபங்களை விட்டுப் பாதுகாப்புத் தேடி ஓடி, சுமார் ஒரு மணித்தியாலயத்திற்குப் பின்னர் திரும்பி வந்து எழுத வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

இதனால் வன்னிப் பகுதியில் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அச்சத்திற்கு மத்தியிலேயே பரீட்சை எழுதுகின்றார்கள் என்றார். (அ-6)

## இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான மக்கள் கருத்தாய்வு நாளை கனடாவில்

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை தீர்வு தொடர்பான மக்கள்கருத்தாய்வு நிகழ்வு ஒன்று கனடாவின்றொறன்ரோ நகரில்இடம் பெறவுள்ளது.

எதிர்வரும் 17ம் திகதி கனடாவின்கிழக்குப் பிராந்திய ஸ்கொப்ரோ கிராமத்தில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பேராசிரியர் ரத்ன ஜீவன் ஹூல் சர்வதேச மன்னிப்புச் சபையின் கனடாவுக்கான இணைப்பதிகாரி ஜோன் ஹார்கூ ஆகியோர் பிரதான பேச்சாளர்களாகப் பங்கு கொள்ளவுள்ளனர்.

சமாதானத்திற்கான கனடா அமைப்பு ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்வில் பெருமளவான புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர் கள் பங்கேற்கவுள்ளனர்.

கனடாவில் தற்போது சுமார் 3 இலட்சம் இலங்கைத் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர் இவர்களில் 80 வீதமானோர் ரொறன்ரோப் பிரதேசத்தில் வாழ்ந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-5)

## காலனித்துவ ஆட்சியாளரைப் போன்று நாராயணன் செயற்பட முயற்சி

### ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச தெரிவிப்பு

(கொழும்பு)



இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் இலங்கையின் காலனித்துவ ஆட்சியாளரைப் போன்று செயற்பட்டு வருவதாக ஜே.வி.பி யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ளார். இலங்கையின் இறமையில் இந்திய அரசாங்கம் தேவையில்லாமல் மூக்கை நுழைப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

புது டெல்லியின் ஆட்சியின் கீழ் இலங்கை காணப்படுவதனைப் போன்ற தொரு நிலையில் எம். கே. நாராயணன் செயற்பட்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார். இல்ங்கை அரசியலில் இந்திய தலையீடு என்ற தலைப்பில் மஹாவலி கேந்திரநிலையத்தில் நடைபெற்ற கருத்தரங்கொன்றில் விரிவுரையாற்றும் போது சோமவன்ச அமரசிங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

வரலாற்றுக் காலம் முதலே தமது அண்டை நாடுகளின் மீது அதிகாரப்பலத்தைப் பலவந்தமாகத் திணிப்பதற்கு இந்தியா முயன்று வருவதாக அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்திய தலையீட்டுககுஎதிராகப பிராநதியத்தின் ஏனைய நாடுகள் காலம் தாழ்த்தாது குரல்கொடுக்கவே வண்டியஅவசியம் எழுந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இந்தியாவின் கைப்பொம்மையாகச் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நீண்ட காலமாகத் தொடர்ந்து வரும் பிரிவினைவாதப் பிரச்சினைக்குத் தீர்வுகாணப்பட வேண்டிய உண்மையான நோக்கம் இந்தியாவிடம் காணப்படவில்லை என சோமவன்ச அமரசிங்க குறிப்பிட்டுள்ளார். (அ-6)

## கிங்ஸ்டனின் புதிய பிளாஷ் டிரைவ்

பல மொடல்களில் யு.எஸ்.பி. பிளாஷ் டிரைவ்களை விற்பனைக்கு அனுப்பிவரும் கிங்ஸ்டன் நிறுவனம் அண்மையில் DT 100,101,400 என்ற பெயர்களில் மூன்று பேட் பா யு.எஸ்.பி. டிரைவ்களை கொண்டு வந்துள்ளது.

DT 10016 ஜிபி பேட்டா வரை கொள்ளக் கூடியது. இவற்றில் மைக்கோ சிங்க் என்ற புரோகிராம் தரப் பட்டுள்ளது. இதன் மூலம் உங்கள் ஹார்ட் டிரை வில் உள்ள ஈமெயில் செட்டிங்ஸ் அமைப்பை ஒருங்கிணைத்து செயல்படுத்தலாம் இதில் 20mbps வேகத்தில் பைல்கள் படிக்கப்படுகின்றன. எழுதும் வேகம் 10mbps இவற்றில் உள்ள செக்யூர் ட்ராவலர் புரோ கிராம் உள்ளிருக்கும் பேட்டாவிற்கு பாஸ் வேட் பாதுகாப்பு அளிக்கிறது. DT400 விண் டோஸ் மட்டு மின்றி மேக் ஆப்பரேட்டிங் சிஸ்டத்துடனும் இணைந்து செயல்படுதிறது. DT100மூடி இல்லாமல் இழு வகையில் திறந்து செயல் படும் வகையில் சிறியதாகவுமுள்ளது.

DT101 பல வண்ணங்களில் கிடைக்கிறது. அனைத்து டிரைவ்களும் ஐந்தாண்டு வாரண்டியில் கிடைக்கிறது. எந்த நேரமும் இது குறித்த தொழிநுட்ப ஆலோசனைகளைப் பெறுவதற்கு வசதி செய்யப்பட்டுள்ளது. DT100 மற்றும் DT400 டிரைவ்கள் 2, 4, 8 மற்றும் 16ஜிபிகொள்ளளவு திறனுடன் பல மொடல்களில் கிடைக்கின்றனDT101 2, 4மற்றும்8ஜிபி அளவுகளில் கிடைக்கிறது அவற்றிற் கேற்ப இவை விலையிடப்பட்டுள்ளன. (அ-6)

## பிராந்தியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான உடன்படிக்கை

(கொழும்பு)

பிராந்தியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு உடன்படிக்கையொன்றை இறுதி நிலைப் படுத்துவதற்காகப் பிம்ஸ்டெக் அமைப்பு எதிர்வரும் 29ஆம் திகதி இந்திய புதுடில்லியில் கூடவுள்ளது.

வங்காள விரிகுடாவின் பல்துறை தொழிநுட்பப் பொருளாதாரஒத்துழைப்பு நாடுகளை அங்கத்துவமாகக் கொண்டதே இந்த பிம்ஸ் டெக் அமைப்பாகும்

இந்த அமைப்பில் இலங்கை , பங்களாதேஷ் ,பூட்டான்,இந்தியா,நேபாளம், தாய் லாந்து மற்றும் மியன்மார்ஆகிய 7 நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்த நிலையில் இந்த நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் எதிர்வரும் 29ஆம் திகதி புதுடில்லியில் கூடவுள்ளனர்.

இவர்கள் பிராந்தியத்தின் பயங்கரவாத எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கான உடன்படிக்கையை இறுதி நிலைப்படுத்தும் பேச்சுவார்த்தைகளை நடத்தவுள்ளனர்

இந்த மாத ஆரம்பத்தில் கொழும்பில் இடம் பெற்ற தெற்காசியப் பிராந்திய ஒத்துழைப்பு நாடுகளின் மாநாட்டின் போது எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு அமையவே இந்த ஒன்று கூடல் இடம் பெறுகின்றது. (அ-5)

## மாத்தளை பகுதியில் ஆறு தமிழ் இளைஞர்கள் கைது

(கொழும்பு)

கண்டி விசேட பொலிஸ் குழுவொன்றினால் மாத்தளைப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்புத் தேடுதலின் போது தமிழ் இளைஞர்கள் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து வெடிபொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளரும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமாகிய ரஞ்சித் குணசேகர தெரிவித்தார்.

இது குறித்து பொலிஸ் ஊடக பேச்சாளர் தொடர்ந்தும் கூறியதாவது,

கண்டி பொலிஸாருக்கு கிடைத்த தகவலொன்றின் பிரகாரம் மாத்தளைப் பிரதேசத்தில் இந்த திடீர் சுற்றிவளைப்புத் தேடுதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் தொடர்புடைய மேற்படி இள்ளஞர்கள் பல்வேறு குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புடையவர்கள் என தகவல் கிடைத்துள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் அனைவரும் 20 முதல் 30 வயதுக்கிடைப்பட்டவர்கள் எனவும அவர்களில் சிலர் வடக்கு கிழக்கைச் சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளின் போது தெரிய வந்துள்ளது.

குறித்த கைதை அடுத்து பொலிஸார் அவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர் கிடைத்த தகவல்களின் பிரகாரம் அப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடி பொருட்கள் உள்ளிட்ட ஆயுதங்கள் சிலவும் மீட்கப்பட்டுள்ளன.

13 கிலோகிராம் நிறையுடைய சீ-4 ரக வெடி பொருட்கள் , 12 அடி நீளமான டெட்டனேட்டர் வயர் கோட்கள், டெட்டனேட்டர்கள் 30, சைனைட் குப்பிகள் 06, நேரக்கணிப்பு கருவிகள் 03, மற்றும் மின்கலங்கள் 03 போன்றனவே பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

இவ்வாயுதப் பொருட்களுடன் கைது செய்யப்பட்ட இளைஞர்கள் அனைவரும் மாத்தளை, பன்வில, அலவத்துகொட, கட்டுகடுஸ் தொட்ட போன்ற பிரதேசங்களில் இடம்பெற்ற குண்டுத் தாக்குதல் சம்வங்கள உள்ளிட்ட 13சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என விசாரணைகளின் போது தெரியவந்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்கள் கண்டி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு தொடர்ந்தும் விசாரணைகளுக்கு, உட்படுத்தப்பட்டு வருகின்றனர். (அ-6)

## மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கு இராணுவத்தினரால் தடை-ஆசியான் நியூஸ்

(கொழும்பு)

வடக்கில் அரச படையினருக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம் பெற்று வரும் உக்கிர மோதல்களினால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்துள்ள பொதுமக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு இராணுவத்தினர் தடை ஏற்படுத்தி வருவதாக ஆசியான் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

மனிதாபிமான ரீதியான உதவிகள் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வழங்கப்படுவதாகக் கூறி இராணுவத்தினர் பல்வேறு தடைகளை ஏற்படுத்தி வருவதாகத் தெரிவிக்கப் படுகிறது.

பொதுமக்களின் பாதுகாப்பு மற்றும் அவர்களது உணவுத் தேவைகள் பூர்த்தி செய்யப் பட வேண்டியது மிகவும் இன்றியமையாததென மன்னார் ஆயர் குறிப்பிட்டுள்ளார். கடந்த இரண்டரை மாத காலப்பகுதியில் சுமார் 75 ஆயிரத்திற்கும் அதிகமான பொதுமக்கள் வடக்குப் பிரதேசத்தில் தமது- சொந்த இடங்களை விட்டு இடம்பெயர்ந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் அமைப்பு தகவல் வெளியிட்டுள்ளது.

பல்லாயிரக் கணக்கான பொதுமக்கள் மர நிழலின் கீழ் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக தேசிய சமாதானப் பேரவை சுட்டிக்காட்டியுள்ளது.

உணவு தங்குமிட வசதிகள் உள்ளிட்ட மிகவும் இன்றியமையாத தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள முடியாத வகையில் இராணுவத்தினர் தடைகளை ஏற்படுத்தி வருவதாகத் தேசிய சமாதானப் பேரவை குறிப்பிட்டுள்ளது.

பொதுமக்களின் நிலைகள் மீது மேற்கொள்ளப்படும் வான் மற்றும் தரைவழித் தாக் குதல்களை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என அந்த அமைப்பு அரசாங்கத்திடம் கோரிக் கை விடுத்துள்ளது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ள அப்பாவிப் பொது மக்களின் பாதுகாப்பையும், மனிதாபிமான உதவிகளை வழங்கக் கூடிய சூழ்நிலையையும் அரசாங்கம் உறுதி செய்ய வேண்டும் என மன்னார் பேராயர் அருட்திரு இராயப்பு ஜோசப் ஆண்டகை கோரிக்கை விடுத்துள்ளார். (அ-6)

கணப்பு காயவேண்டுமானால் புகையை பொறுத்துக் கொள்ளத்தான் வேண்டுமா?
~ வங்காளம்

வலம்புரி

# பயண அனுமதி நடைமுறை சிக்கல்களை நீக்க வேண்டும்

யாழ்.குடாநாட்டு மக்கள் வெளி மாவட்டங்களிற்குச் செல்வதாயின் பயண அனுமதி பெற்றாகவேண்டும் என்ற நியதி பல வருடங்களாக உள்ளது.

எனினும் தற்போது பயண அனுமதி பெறுவதில் பெரும் சிரமங்களும் அலைச்சல்களும் ஏற்பட்டுள்ளன.

சிரமங்கள், அலைச்சல்களுக்கு அப்பால் பயண அனுமதி நிராகரிக்கப்படுவதும் –நீண்ட நாட்கள் ஆவதும் மற்றுமோர் துன்பியலாகும்.

வெளி மாவட்டங்களில் குறிப்பாக கொழும்பில் தங்கவுள்ள,விலாசம் உறுதிப்படுத்தப்பட்டு பயண அனுமதி வழங்குதல் என்ற நிபந்தனையால் பலர் கொழும்பிற்கே செல்ல முடியாதவர்களாக உள்ளனர்.

கொழும்பு செல்லும் எல்லோருக்கும் உறவினர் வீடுகள் இருக்கும் என்ற நினைப்பு தவறானதாகும். பலர் விடுதிகளிலேயே தங்குகின்றனர்.

இந்நிலையில் விடுதியில் தங்குவோர் விடுதியின் முகவரியைக் கொடுப்பதும், அதனை விடுதி நிர்வாகம் ஏற்றுக்கொள்வதுமான நடைமுறைகள் ஒருபோதும் சாத்தியமாகாது.

எனவே இது விடயத்தில் நெகிழ்வுத் தன்மையைக் கடைப்பிடிப்பது தொடர்பில் சாதகமான முடிபை படைத்தரப்பினர் எடுத்தாகவேண்டும்.

இதற்கு மேலாக முதியவர்களின் விடயத்தில் பயண அனுமதியை இரத்துச் செய்வது கட்டாயமானதாகும்.

எண்பது வயதிலுள்ள ஒருவருக்கும் பயண அனுமதி உண்டென்பது அடிப்படை மனித நேயமற்ற செயலாகும்.

இத்தகைய செயல்கள் நாடு எங்களுடையது, உங்களை நாங்கள் ஆள்கின்றோம் என்பதை மறைமுகமாக உணர்த்துவதுபோல அமைகின்றது.

எனவே, ஏற்கனவே நடைமுறையில் இருந்த ஐம்பத்தைந்து வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பயண அனுமதியை இரத்துச் செய்வது கட்டாயமானதாகும்.

ஐம்பத்தைந்து வயது இளம் வயது எனப் படைத்தரப்பு கருதுமாயின், அறுபது வயது அதாவது ஓய்வு பெறும் வயதைக் கடந்தவர்களுக்கேனும் பயண அனுமதியை இரத்துச் செய்வது முதியவர்களின் அசௌகரியங்களைச் சிறிதளவேனும் குறைப்பதாக அமையும்.

தென்பகுதியிலுள்ள பெரும்பான்மை இனம் சார்ந்த முதியவர்களை கௌரவிக்கும்போது யாழ்ப்பாணத்து முதியவர்கள் பயண அனுமதிப் படிவத்துடன் கிராம சேவையாளர், பிரதேச செயலகம், தத்தம் பகுதியிலுள்ள படையினரின் சிவில் அலுவலகம் என அலைந்து திரிகின்றனர்.

இஃது மனச்சாட்சிக்கு ஒவ்வாத விடயமாகும். ஆகவே பயண அனுமதியை மிக இறுக்கமாக நடைமுறைப்படுத்தும் திட்டத்தை அமுலாக்குமாறு உத்தரவிட்டுவிட்டு நடைமுறைச் சிக்கல்கள் பற்றி –தமிழ் மக்கள் படும் அலைச்சல் பற்றி எதுவுமே அறிந்து கொள்ளாத – அறியவும் விரும்பாத படைத்தளபதிகள் மனித நேயத்துடன் தமது முடிபுகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணி செவ்வாய்க்கிழமை ஆரம்பம் -அநுர எதிரிசிங்க

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் திருத்தும் பணிக்கான சகல ஒழுக்குகளும் பூர்த்தி செய்யப்பட்டதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுர எதிரி சிங்க தெரிவித்துள்ளார்.

இதுவரை 20 ஆயிரம் ஆசிரியர்கள் திருத்துவதற்காக தம்மை பதிவு செய்து கொண்டுள்ளார்கள். விடைத்தாள் திருத்தும் பணியின் முதலாம் கட்டம் அடுத்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்படும். இதற்காக தெரிவு செய்யப்பட்ட பரிசோதகர்களுக்கு நியமனக் கடிதங்கள் அனுப்பப்பட்டிருப்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

பரீட்சை விடைத்தாள் திருத்தும் பணியில் இந்த ஆசிரியர்கள் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு ஆசிரியரும் விடைத்தாள் திருத்தும் பணியில் கலந்து கொள்ளாமை குறித்து தெரிவிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (அ)

# உயர்தரப் பரீட்சையில் மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படலாம் - ஆசிரியர் சங்கம் அச்சம்

நடைபெற்று வரும் கல்விப் பொதுத்தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சைகளின் போது மாணவர்களுக்கு அநீதி இழைக்கப்படலாமென ஆசிரியர் சங்கம் அச்சம் வெளியிட்டுள்ளது.

வேதன முரண்பாடுகள் காரணமாக இம் முறை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளை ஆசிரியர்கள் பகிஷ்கரிக்க இருப்பதால் மதிப்பீட்டுப் பணிகள் தடைப்படும் நிலமை ஏற்பட்டிருப்பதாக சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்தார்.

எனினும் கல்வி அமைச்சு பரீட்சை வினாத்தாள்களை திருத்துவதற்கு விண்ணப்பிக்காத பல ஆசிரியர்களை தன்னிச்சையாக இந்தப் பணிகளுக்காக வரவழைத்துள்ளது. இது விருப்பமில்லாத ஒரு செயலை செய்வதற்கான ஏது நிலையை தோற்றுவிக்கம் என்பதால் மாணவர்கள் பாதிக்கப்படக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை, க.பொ.த.உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீடுகளை மேற்கொள்ள பட்டதாரி ஆசிரியர்கள் தயாராக இருப்பதாக அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது. இது பற்றி சங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது, ஆசிரியர் சம்பள முரண்பாடுகளைக் காரணமாக வைத்து மாணவர்களின் உரிமைகளில் எவ்வித பாதிப்புக் களையும் ஏற்படுத்த தமது சங்கத்தின் எந்தவொரு உறுப்பினரும் முன்வர மாட்டார்கள்.

பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஆசிரியர்களின் வேலை நிறுத்தத்துக்கு 12 ஆசிரியர் சங்கங்களை உள்ளடக்கிய எமது அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் ஆதரவு வழங்காது. இது பற்றி கல்வி அமைச்சுக்கும் பரீட்சைகள் ஆணையாளருக்கும் அறிவித்துள்ளோம். பட்டதாரி ஆசிரியர்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைய கல்வியமைச்சு உரிய நடவடிக்கை களை மேற்கொண்டு வருவதாக அமைச்சின் செயலாளர் தமக்கு அறிவித்துள்ளதாகவும் அகில இலங்கை பட்டதாரி ஆசிரியர் சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (அ)

# கனடாவிலிருந்தபடியே வெளிநாட்டுப் பிரஜைகள் நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிக்க வாய்ப்பு-ஒக்டோபர் முதல் அறிமுகம்

(கொழும்பு)

கனடாவிலுள்ள வெளிநாட்டு மாணவர்களும் தற்காலிக தொழில்புரியும் வெளிநாட்டுப் பிரஜைகளும் கனடாவில் இருந்தவாறே அந் நாட்டின் நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிக்க அனுமதிக்கும் புதிய குடிவரவு சட்ட விதிகள் குறித்து அந்நாட்டு அரசாங்கம் அறி வித்துள்ளது.

இதுவரை மேற்படி நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிக்கும் கனடாவிலுள்ள அந்நாட்டு பிரஜாவுரிமை பெறாத வெளிநாட்டவர்கள் தனது சொந்த நாட்டிற்கு திரும்பியே விண்ணப்பிக்க வேண்டியிருந்தது. அதன் காரணமாக இந்த நிரந்தர வதிவிட உரிமை பெறும் நடைமுறையானது 6 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்டகாலத்தை எடுக்கும் செயற்கரமாக இருந்து வந்தது.

இந்நிலையில் புதிய கனேடிய அனுபவ வகுப்பு செயற்கிரமமானது எதிர்வரும் ஒக்டோபர் மாதம் முதல் நடை முறைப் படுத்தப்படவுள்ளதாக கனேடிய குடிவரவு அமைச்சர் டானி பின்லே தெரிவித்தார்.

இதன் பிரகாரம் சில குறிப்பிட்ட பிரிவுகளைச் சேர்ந்த வெளிநாட்டு பணியாளர்களும் வெளிநாட்டு மாணவர்களும் கனடாவில் இருந்தபடியே நிரந்தர வதிவிட உரிமைக்கு விண்ணப்பிக்க முடியும் எனக்கூறிய டானி பின்லே இந்த புதிய நிரந்தர வதிவிட உரிமை வழங்கும் திட்டத்தின் கீழ் வருடாந்தம் 12,000 முதல் 18.000 பேருக்கு வதிவிட உரிமை வழங்கப்படவுள்ளதாக கூறினார். (அ-6)

# ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தின் மீதான குற்றச்சாட்டு கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல்

## எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு

(கொழும்பு)

ஊடகவியலாளர் திஸ்ஸ நாயகத்தை அரசாங்கம் விடுதலை செய்ய வேண்டும் என எல் லைகளற்ற பத்திரிகையாளர்கள் அமைப்பு வேண்டுகோள்விடுத்துள்ளது.

மதிப்பிற்குரிய இந்த ஊடகவியலாளரை சட்டரீதியற்ற வகையிலும் நீதியற்ற முறையிலும் தடுத்துவைத்திருப்பதுடன், அவர் மீது நம்ப முடியாத குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருப்பதானது இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள கருத்துச் சுதந்திரத்தை மீறும் செயல் என எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் ஊடகவியலாளர் திஸ்ஸநாயகத்தை விடுவிப்பதற்கான அழுத் தங்களை வழங்குமாறு ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச சமூகத்திடம் வேண்டுகோள் விடுக்கிறோம் எனவும் அந்த அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

கடந்த ஓகஸ்ட் 12ஆம் திகதி அனர்த்த முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சின் செயலாளர் பேராசிரியர் ரஜீவ் விஜே சிங்க, மனித உரிமைகள்கண்காணிப்பகத்துக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், நீண்ட காலமாக பொலிஸார் நடாத்திய விசாரணைகளின் அடிப்படையில் திஸ்ஸ நாயகம் தற்போது பயங்கரவாத குற்றச்சாட்டுக்களுக்கு முகங்கொடுத்திருப்பதாக குறிப்பிடப்பட்டிருந்ததாகவும் இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

ஆனால் 2006ஆம் ஆண்டுவெளிவந்த ஒரு சஞ்சிகையில் திஸ்ஸ நாயகம் எழுதிய கட்டுரை ஒன்றையே குற்றச்சாட்டுகளுக்கு ஆதாரமாகக் குறிப்பிட்டுள்ளதாகவும் அக்கட்டுரையில் தமிழ் மக்களின் பிரதேசங்களின் மீது முன்னெடுக்கப்படும் இராணுவ நடவடிக்கைகளின் காரணமாக பொது மக்கள் மனிதாபிமான நெருக்கடிக்குள் தள்ளப்பட்டிருப்பதாகவே எழுதப்பட்டிருப்பதாகவும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சண்டே டைம்ஸ் பத்திரிகையின் பத்தி எழுத்தாளராக கடமை புரிந்த திஸநாயகம், அவுட்ரீச் எனும் இணையத்தளத்தை ஜேர்மனிலுள்ள FLICTஎனும் அரசசார்பற்ற நிறுவனத்தின் நிதியுதவியுடன் ஆரம்பித்த சில வாரங்களின் பின்னரே கைது செய்யப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, 2006இல் அவர் எழுதிய கட்டுரையானது விடுதலைப்புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களைக் கொண்டிருப்ப தாக குற்றஞ்சுமத்த பொலிஸார் முயற்சிப்பதாகவும் எல்லைகளற்ற பத்திரிகையாளர் அமைப்பு தெரிவித்துள்ளது. (அ-6)

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும் (78)

ஓலைச் சுவடி

### தங்கக் கொலுசை காலில் அணியலாமா?

தங்கம் மகாலட்சுமியும் ஐஸ்வர்யமும் ஆகும். அதனால் தங்க நகையைக் காலில் அணிவது தரையில் போட்டு மிதிப்பதற்கு சமம் என்பது நம்பிக்கை.

மருத்துவத்துறை இன்று கண்டறிந்த சில உண்மைகளை நம் முன்னோர்களும் உணர்ந்திருந்தனர்.

ஏனென்றால், கணுக்காலில் எப்போதும் உராய்ந்து கொண்டிருக்கும் நகை கொலுச் கணுக்காலில் எப்போதும் உராய்ந்து கொண்டிருந்தால் வாதம் பாதிக்க வாய்ப்பு உள்ளது என்று மருத்துவத்துறை சுட்டிக்காட்டுகிறது.

# சப்பிரகமுவ, வடமத்திய, மாகாண சபைத் தேர்தல்களில்

# போர் வெறியா அல்லது பொருளாதாரமா?

நாடு என்றுமில்லா பொருளாதார நெருக்கடியில் அமிழ்ந்திருக்கும் வேளையில், சப்பிரகமுவா மாகாண



வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடாத்துவதின் நோக்கம் எதுவாக இருக்கும் என்பது நோக்கப்பட வேண்டியதோர் விடயமாகும். இவ்விரு சபைகளுக்குமான ஆயுட் காலம், முடிவடைவதற்கு முன்னதாக அச்சபைகள் கலைக்கப்பட்டு எதிர்வரும் 23 ஆம் திகதி தேர்தல் நடைபெறும் என அரசு அறிவித்துள்ளது.

நிறைவேற்று ஜனாதிபதியாக இருக்கும் ஒருவர் எதிர்காலத்தில் நடைபெறவுள்ள பாராளுமன்ற ஜனாதிபதித் தேர்தல்களை எதிர்கொள்வதற்கு, உள்ளுராட்சி, மாகாண சபைகளின் நிர் வாகங்கள தமக்குச் சார்பானதாக அமைக்கப்படுவதும், தனது ஆட்சியை மக்கள் எவ்வாறு கணிப்பீடு செய்துள்ளார்கள் என்பதை நாடி பிடித்துப் பார்ப்பதற்கும், இவ்வாறான தேர்தல்களை நடாத்துவது ஒரு மரபுமுறையாக இருந்து வருகின்றது.

கிழக்கு மாகாண சபைத் தேர்தல் நடாத்தி முடிக்கப்பட்ட கையுடன், மற்றைய எட்டு மாகாணங்களில், ஆறையும் புறமொதுக்கி விட்டு, சப்பிரகமுவா மற்றும், வடமத்திய மாகாண சபைகளுக்கான தேர்தலை நடாத்துவதன் நோக்கம் எதுவாக இருக்கும் என மக்கள் மனங்களில் ஏற்பட்ட கேள்வி நியாயத்தின் பாற்பட்டதாகும்.

மற்றைய மாகாணங்களில் தமிழர், முஸ்லிம்கள் போன்ற சிறுபான்மை இனத்தவர்கள், இவ்விரு மாகாணங்களையும் விடக் கூடுதலாக இருப்பதாலும், சிறுபான்மை இனத்தவர்கள் அரச சார்புக் கட்சியான மஹிந்த அரசுக்கு வாக்களிக்கும் வாய்ப்புக்கள் அருகி இருப்பதைத் தெரிந்து கொண்டதாலும், சிறுபான்மை மக்கள் குறைவாக இருக்கும் இவ்விரு மாகாணங்களிலும் தேர்தலை நடாத்தி வெற்றிபெறலாம் என்ற நம்பிக்கையில், தேர்தலை நாடாத்துகின்றது.


இதேவேளை கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் அரசு இவ்விரு மாகாணங்களிலும் ஐ.தே.கட்சியை விடக் கூடுதலான வாக்குகளைப் பெற்றிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ அரசுக்கு, விலைவாசி உயர்வால் மக்கள் படும் துன்ப துயரங்களை, யுத்த பேரிகையையும் கூட்டி இதன்பால் ஈர்த்தெடுக்க வேண்டிய கடப்பாடுடன் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலின் போது, அதற்கான ஆதரவுத் தளமாக மாகாண சபைகளின் நிர்வாகத்தைத் தனது கைக்குக் கொண்டு வர வேண்டிய தேவை உண்டு.

ஜே.வி.பி.கட்சியினரால் கொண்டு வரப்பட்ட வேலை நிறுத்தம், உண்மையான வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு என்பதற்கும் அப்பால், தன்னால் முன்னெடுத்துச் செல்லப்படுகின்ற யுத்த வெறிகளுக்கு ஓர் எதிர்மறைத் தோற்றத்தை ஏற்படுத்தும் ஒரு தேசிய விரோத நடவடிக்கையேயாகும் என்ற நிலையை சிங்கள மக்கள் மத்தியில் உருவாக்க வேண்டிய காலத்தின் கட்டாயமும் உண்டு.

முக்கிய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும், அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் இத் தேர்தல் ஒரு மரணப் பொறியாகவுள்ளது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலைத் தொடர்ந்து தொடர்ச்சியாகத் தோல்வியைச் சந்தித்து வந்ததற்கு இக்கட்சியின் தலைமைத்துவப் பலயீனமே முக்கிய காரணம் என்ற முணுமுணுப்புக்கள் இக்கட்சிக்குள்ளும் எழத்தொடங்கியதால், இத்தேர்தலிலும் ஐக்கிய தேசியக் கட்சி தோல்வியடையும் போது கட்சித் தலைமைத்துவம் ருக்மன் சேனநாயக்கவிற்கு வழங்கப்பட வேண்டுமென்ற பலமான கோரிக்கைகள் எழுந்துள்ளதாகத் தெரியவருகின்றது.




எனவே இக்கட்சி இவ்விரு மாகாண சபைத் தேர்தல்களையும், அரசாங்கத்தை வீழ்த்தும் போராட்டக்களமாக மாற்றி மக்கள் சக்தியை ஒன்றுதிரட்டி தேர்தல் முடிவுகள் வெளிவரும் அதே வேளை, அரசாங்கமும் கலைக்கப்பட்ட செய்தி வெளிவரவேண்டும் எனப் பிரச்சாரம் செய்ய முற்பட்டிருப்பதுடன் மக்களின் கைகளில்தான் ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் சக்தி உண்டு எனவும் கூறிவருகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ அரசு புலிகளைத் தோற்கடிப்போமென்று யுத்த வெறியூட்டப்பட்ட சிங்கள மக்களுக்குப் புலிகள் பலவீனமடையவில்லை. அவர்கள் இராணுவத்தை வலிந்து தாக்க முற்படும் போது யுத்த மாயை கலைந்து விடும என்பது சாதாரண சிங்கள மக்களுக்கு தெரிந்துகொள்ளும் வாய்ப்புக்கள் இல்லை.

இதனால் அரசினுடைய பிரச்சாரம் மக்களிடையே பலித்து வருகின்றது. ஐக்கிய தேசியக் கட்சியின் வடமத்திய மாகாண சபையின் தலைமை வேட்பாளராக முன்னை நாள் இராணுவத் தளபதி ஜானக பெரேரா சிங்கள மக்கள் மத்தியில் பரீட்சையமானவர், புலிகளுடன் போரிட்டவர் என்ற சிறப்பு மேலாண்மைத் தகைமைகளைக் கொண்டும், இம் மாகாணத்தில் முப்பத்தையாயிரம் குடும்பங்கள் நேரடியாக இராணுவத்துடன் தொடர்பு கொண்டவர்கள் என்ற வகையிலும் இப்பதவிக்கு இவரைத் தேர்ந்தெடுத்தது.

ஜானக பெரேரா இராணுவத் தள பதியாக இருந்த போதிலும், இவர் இம் மாகாணத்தைச் சேர்ந்தவர் அல்ல எனவும் ஜே.வி.பி. கட்சிக்காரர் மேற்கொண்ட புரட்சியின் போது இக் கட்சியின் உறுப்பினர்கள பலரைக கொலை செய்ததில் பெரும் பங்கு வகித்தவர் என்பதாலும் இவருக்கான ஆதரவலை எழுவதற்கான வாய்ப்புக்கள் இருக்கப்போவதில்லை என்ற அபிப்பிராயமும் காணப்படுகின்றது.



சப்பிரகமுவா மாகாணசபையின் தலைமை வேட்பாளராக ரஞ்சன் ராமநாயக்க என்ற சிங்களத் திரைப்பட நடிகரை ஐ.தே.கட்சி நியமித்துள்ளது. இவரும் சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்கவைப் போல, கரையோர மீனவ சமுதாயத்தில் இருந்து கொண்டு வரப்பட்டவர். இந்தவகையில் இவரது திரைப்பட எழுச்சி கண்டு பீதியடைந்த மஹிந்த அரசு, அவரது சமூகப் பின்னணியிலுள்ள தாழ் நிலையையும், எடுத்துக் காட்டி வருகின்றது. ரஞ்சன் ராமநாயக்க சம்பிரகமுவ மாகாணத்தைச் சேர்ந்தவராக இல்லாத போதிலும் சிங்களச் சினிமாவின் சண்டைப்பட வீரனாக நடித்து மக்கள் மனங்களில் ஓர் இடத்தைப் பிடித்துக்கொண்டவர் என்பதால் இவ்வாறான ஒருவரின் நியமனம் வெற்றிக்கு வாய்ப்பாகும் என எண்ணிய ஐக்கிய தேசியக் கட்சி இவரைத் தலைமை வேட்பாளராகத் தேர்ந்தெடுத்தது.

மஹிந்த அரசு வடமத்திய மாகாண சபையின் தலைமை வேட்பாளராக பேர்டி பிரேம்லால் திசாநாயக்க என்பவரையும். சப்பிரகமுவா மாகாண சபையின் தலைமை வேட்பாளராக மகிபால ஹேரத என்பவரையும் நியமித்த போதிலும். இவ்விருவரும் அவ்வவ் மாகாண மக்களால் ஏற்கனவே பரீட்சித்துப் பார்க்கப்பட்டதாலும், இவர்களிடமிருந்து புதிய எதிர்பார்ப்புக்களைக் கண்டுகொள்ள முடியாது என்ற ஆதங்கமும் மக்களிடத்தில் நிலவுகின்றது.

இவ்விரு மாகாணங்களிலும் ஜே.வி.பி.கட்சி மூன்றாவதோர் அணியாகப் போட்டியிடுகின்றபோதிலும் ஆளும் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையே கடும் போட்டி நிலவுவதாகவும் ஜே.வி.பி. ஆட்சியதிகாரத்தைத் தீர்மானிக்கின்ற சக்தியாக அமையலாம் என்ற கருத்துக் கணிப்புடனான ஆரூடமொன்றும் நிலவுகின்றது.

ஜே.வி.பி. அரச அடக்குமுறையையும், விலைவாசி உயர்வையும் முக்கிய பிரச்சினையாகச் சித்தரித்துக் காட்டுவதுடன் மாகாண சபை முறைமை அதிகாரமற்றதும், ஊழல் மோசடிகள் நிறைந்து காணப்படும் நிறுவன மென்றும். இதை நிருபித்துக் காட்டுவதாகவே தாம் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதாகவும் கூறுகின்றனர்.

இடதுசாரிக் கட்சியாகத் தம்மை அடையாளப்படுத்தியவர்கள் சிறுபான்மை இனங்களின் பிரச்சினையை அரசியல் ரீதியாக ஆராய முற்படாது இராணுவ ரீதியாக ஒடுக்குதல், அடக்குதல் என்ற போனவாதக் கோட்பாட்டை ஆதரித்து இனப்பிரச்சினைத் தீர்வுக்காகக் கொண்டு வரப்பட்ட இம் மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கான அருகதை உண்டா? என்ற இடதுசாரிச் சிந்தனைகளும் தேர்தல் பிரதிபலிப்புக்களைக் காணப்படுகின்றன.

இலங்கை அரசியலில் காணப்படும் அடாவடித்தனம், மிரட்டல், காடைத்தனம போன்ற பாசிசக் கலப்பு ஜனநாயக வழிமுறை கடந்த பல ஆண்டுகளாகத் தொடருகின்றது. இவ வழி முறை ஆளும் தரப்புக்கு பெரும் அனுகூலங்களைக் கொடுத்ததால், ராஜபக்ஷ அரசும் தனது சண்டித்தன



அமைச்சர் மேர்வின் டி சில்வாவை இத்தேர்தலில் களமிறக்கியுள்ளதாகவும் தெரிகிறது.

ஐக்கிய தேசியக் கட்சி பிரபல்யம் வாய்ந்த இரு புது முகங்களை நிறுத்திய நிலையில், ஆளும் கட்சி சரியான தலைமைத்துவங்களைப் பெற்றுக் கொடுக்கத் திறனற்றும் போயுள்ளது.

ஆயினும் வட மத்திய மாகாண மக்களுக்கு நெல்லுக்கான அதிகரித்த விலையையும் சப்பிரகமுவா மாகாண மக்களுக்கான றப்பருக்குக் கிட்டிய அதிகரித்த விலையையும் சுட்டிக்காட்டி தனது வெற்றிக்கான வாய்ப்பைப் பெற முயற்சிக்கிறது.

**க.கிருஷ்ணபிள்ளை** B.A(cey)

ஒரு நியாயமான தேர்தல் என்பது மக்களைச் சுயமாகச் சிந்திக்க வைப்பதன மூலம் பெறப்படும் முடிவேயாகும். அந்த வகையில் கடந்த பல தசாப்தங்களாக இலங்கையில் நடாத்தப்பட்டு வந்த தேர்தல்கள் யாவும் சரியான ஜனநாயகத் தீர்ப்பைப் பெறத் தவறியதை பல்வேறு தரப்புக்களாலும் சுட்டிக்காட்டப்பட்டு வரும் இவ்வேளையில் இவ்விரு மாகாணசபைகளின் தேர்தலும், நட்டாமுட்டித் தனத்துடன் ஆரம்பித்ததாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.





இலங்கை வங்கியின் 69ஆவது ஆண்டு விழாக் கொண்டாட்டங்கள் இலங்கை வங்கி திருநெல்வேலிக் கிளையில் இடம்பெற்ற போது முகாமையாளர் இ.பிரேமநாதன் வங்கிக் கொடியினை ஏற்றிவைப்பதனையும் , வாடிக்கையாளர்கள் மங்கல விளக்கேற்றுவதனையும், அருகில் கோண்டாவில் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவி திருமதி வ.சோமசூரியசிங்கம் மற்றும் வங்கி ஊழியர்களையும் படங்களில் காணலாம்.



தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் அருள்மிகு ஜெகஜோதி அம்பாள் ஆலயத்தில் நடைபெற்ற “ ஜோதிப் பிரவாகம்” இறுவட்டு வெளியீட்டின்போது சிறப்பு விருந்தி னராகக் கலந்து கொண்ட வலிமேற்கு கலாசார உத்தியோ கத்தர் க.சந்திரவேல் உரையாற்றுவதையும், இறுவட்டு தயாரிப்பாளர் சிதம்பரநாதன் மாலை அணிவிப்பதையும் படத்தில் காணலாம். (படம்:ச.திலீப்)

# பெல்ப்ஸ் 6-வது தங்கம் வென்றார்

பீஜிங்கில் நடைபெற்றுவரும் ஒலிம்பிக் போட்டிகளில் அமெரிக்க நீச்சல் வீரர் மைக்கெல் பெல்ப்ஸ் நேற்று தனது 6-வது தங்கப்பதக்கத்தையும் வென்றார்.

ஆண்களுக்கான 200 மீற்றர் தனிநபர் மெட்லே பிரிவில் செஸ்லோ சே மற்றும் ரியான் லொக்டி ஆகியோரை பின்தள்ளி பெல்ப்ஸ் முதலிடத்தை பிடித்தார்.

இதன்போது அவர் போட்டி தூரத்தை ஒரு நிமிடம் 54.23 வினாடிகளில் எட்டி தனது முந்தைய உலக சாதனையையும் முறியடித்தார்.

இந்த போட்டியில் ஹங்கேரியைச் சேர்ந்த லெஸ்லோ சே ஒரு நிமிடம் 56.52 வினாடிகளில் இலக்கை எட்டி வெள்ளிப்பதக்கத்தை வென்றார்.

பீஜிங் ஒலிம்பிக் போட்டியில் பெல்ப்ஸிடம் அவர் தோல்வியை தழுவியிருப்பது இது 3-வது முறையாகும்.




இதன் மூலம் பெல்ப்ஸ் ஒலிம்பிக் போட்டி ஒன்றில் அதிக தங்கப் பதக்கங்களை வென்றுள்ள மார்க் ஸ்பிட்ஸின் (7) உலக சாதனையை முறியடிக்கஅண்மித்துள்ளார். ஒலிம்பிக் போட்டிகளில் பெல்ப்ஸுக்கு மேலும் இரண்டு தங்கப்பதக்கங்கள் வெல்லும் வாய்ப்பு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பதக்கத்தை ஏற்க மறுத்த சுவீடன் வீரர்



ஒலிம்பிக் மல்யுத்தப் போட்டியில் தான் ஏமாற்றப்பட்டதாக நினைத்த சுவீடன் வீரர் அரா ஏப்ரஹாமியான் கிடைத்த வெண்கலப் பதக்கத்தை மேடையிலேயே வைத்துவிட்டு வெளியேறினார்.

இது ஒலிம்பி போட்டி அமைப்புக் குழுவுக்கு அதிர்ச்சினை ஏற்படுத்தியது. 84 கிலோ எடைப்பிரிவுக்கான கிரிகோ ரோமன் மல்யுத்தப் போட்டியின் அரையிறுதியில் இத்தாலி வீரர் ஆன்ட்ரியா மின்குஸ்ஸியுடன் மோதினார் அரா ஏப்ரஹாமியான். போட்டியில் தான் சிறப்பாக திறமையை வெளிப்படுத்தியதாக அவர் கருதினார். ஆனால் ஆன்ட்ரியா வென்றதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து துருக்கி வீரர் நஸ்மி ஆவ்லுகாவுடன் அரா ஏப்ரஹாமியானும் வெண்கலப் பதக்கம் வென்றதாக அறிவிக்கப்பட்டது.

பரிசளிப்பு நிகழ்ச்சியில் விருப்பமின்றி மேடையேறி பதக்கத்தைப் பெற்ற அரா ஏப்ரஹாமியான் கைமுட்டியை உயர்த்தி ஆட்சேபத்தை தெரிவித்ததுடன் பதக்கத்தை போட்டி நடைபெற்ற இடத்திலேயே வைத்துவிட்டு வெளியேறினார்.

பின்னர் அந்தப் பதக்கம் சர்வதேச ஒலிம்பிக் குழு அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிலையில் அரா ஏப்ரஹாமியான் மீது போட்டி தடை விதிப்பது குறித்து சர்வதேச ஒலிம்பிக் குழு ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

தோல்வியின் விரக்தி காரணமாக இவ்வாறு நடந்து கொண்ட அரா ஏப்ரஹாமியான் மீது நடவடிக்கை எடுக்கப்படுமென்றும் எதிர்காலத்தில் அவர் போட்டிகளில் பங்கேற்க தடை விதிக்கப்படலாம் என்றும் சர்வதேச ஒலிம்பிக் குழு செய்தித் தொடர்பாளர் இமானுவேல் மோரியா தெரிவித்துள்ளார்.

# பத்தாயிரம் மீற்றர் ஓட்டத்தில் எதியோப்பிய வீராங்கனைக்கு தங்கம்

பெண்கள் 10 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில, எதியோப்பிய வீராங்கனை டிபாபா ஹென்னினி தங்கப் பதக்கம் வென்றதுடன் புதிய சாதனையும் படைத்தார்.

இவர் 10 ஆயிரம் மீற்றரை 29 நிமிடம் 54.66 வினாடிகளில் ஓடி முடித்து, 1993 ஆம் ஆண்டு சீன வீராங்கனை வோங் ஜங்சியாவின் 29 நிமிடம் 31.98 விநாடிகள் என்ற சாதனையை முறியடித்தார்.

இதே பிரிவில் வெள்ளிப் பதக்கத்தை எதியோப்பிய சக வீராங்கனையான டிரார்து ருலுவும் வெண்கலப் பதக்கத்தை துருக்கி வீராங்கனை அபி லெக்ஸியும் வென்றனர்.




**பாலா**

## பதக்கப் பட்டியல்

| நாடு | தங்கம் | வெள்ளி | வெண்கலம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| சீனா | 26 | 9 | 6 | 41 |
| அமெரிக்கா | 14 | 13 | 19 | 46 |
| ஜேர்மனி | 8 | 2 | 4 | 14 |
| கொரியா | 6 | 9 | 3 | 18 |
| இத்தாலி | 6 | 4 | 4 | 14 |
| ஜப்பான் | 6 | 4 | 3 | 13 |
| அவுஸ்திரேலியா | 5 | 7 | 8 | 20 |
| ரஷ்யா | 3 | 8 | 8 | 19 |
| பிரான்ஸ் | 3 | 8 | 7 | 18 |
| பிரித்தானியா | 3 | 2 | 3 | 8 |
| சுலோவாக்கியா | 3 | 1 | - | 4 |
| உக்ரைன் | 3 | - | 4 | 7 |
| செக்குடியரசு | 2 | 2 | - | 4 |
| ஜோர்ஜியா | 2 | - | 1 | 3 |
| கியூபா | 1 | 3 | 4 | 8 |
| நெதர்லாந்து | 1 | 2 | 4 | 7 |
| அஜர்பைஜான் | 1 | 2 | 1 | 4 |
| தென்கொரியா | 1 | 1 | 3 | 5 |
| ரோமானியா | 1 | 1 | 2 | 4 |
| மொங்கோலியா | 1 | 1 | - | 2 |
| போலந்து | 1 | 1 | - | 2 |
| சுவிட்சர்லாந்து | 1 | - | 3 | 4 |
| ஸ்பெயின் | 1 | - | 1 | 2 |
| பின்லாந்து | 1 | - | 1 | 2 |
| எதியோப்பியா | 1 | - | - | 1 |
| இந்தியா | 1 | - | - | 1 |
| தாய்லாந்து | 1 | - | - | 1 |
| ஹங்கேரி | - | 4 | 1 | 5 |
| கஜகஸ்தான் | - | 3 | 2 | 5 |
| சிம்பாவே | - | 3 | - | 3 |
| சுவீடன் | - | 2 | 1 | 3 |
| துருக்கி | - | 2 | 1 | 3 |
| பெலாரஸ் | - | 1 | 3 | 4 |
| ஆஸ்திரியா | - | 1 | 2 | 3 |
| அல்ஜீரியா | - | 1 | 1 | 2 |
| ஹர்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| நோர்வே | - | 1 | 1 | 2 |
| சுலோவேனியா | - | 1 | 1 | 2 |
| உஸ்பெஸ்கிஸ்தான் | - | 1 | 1 | 2 |
| கொலம்பியா | - | 1 | - | 1 |
| வியட்நாம் | - | 1 | - | 1 |
| ஆர்மேனியா | - | - | 5 | 5 |
| பிரேஸில் | - | - | 4 | 4 |
| இந்தோனேசியா | - | - | 2 | 2 |
| சீனா தைபே | - | - | 2 | 2 |
| ஆர்ஜென்டினா | - | - | 1 | 1 |
| பல்கேரியா | - | - | 1 | 1 |
| குரோஷியா | - | - | 1 | 1 |
| டென்மார்க் | - | - | 1 | 1 |
| எகிப்து | - | - | 1 | 1 |
| லிதுனியா | - | - | 1 | 1 |
| மெக்ஸிக்கோ | - | - | 1 | 1 |
| தஜிகிஸ்தான் | - | - | 1 | 1 |
| ரூகோ | - | - | 1 | 1 |




# யுவராஜ் சிங் சிக்ஸர் மழை பொழிந்தார்; பயிற்சி ஆட்டத்தில் இந்தியா வெற்றி

(கொழும்பு)

யுவராஜ் சிங் அதிரடியான சதத்தின் மூலம் இலங்கை லெவின் அணியுடனான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி 92 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இந்திய அணி 3 டெஸ்ட்,5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.

இதில் டெஸ்ட் தொடரை இலங்கை அணி 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையில் 5 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது போட்டி நாளை மறுதினம் தம்புள்ளயில் நடைபெறவுள்ளது.

இதற்கு முன்னான பயிற்சி ஆட்டத்தில் இந்திய அணி நேற்று இலங்கை லெவின் அணியுடன் மோதியது.

இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, யுவராஜ் சிங்கின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் 50 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை மாத்திரமிழந்து 342 ஓட்டங்களை எடுத்தது.

இதில் யுவராஜ் சிங் 121 பந்துகளில் (8 பவுண்டரிகள், 13 சிக்ஸர்கள் உட்பட) 172 ஓட்டங்களையும் ரெய்னா 45 ஓட்டங்களையும் காம்பீர் 31 ஓட்டங்களையும் தோனி ஆட்டமிழக்காமல் 24 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் வெல கென்தார 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பதிலுக்கு 50 ஓவர்களில் 343 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இலங்கை லெவின் அணி 50 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 250 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து 92 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் ஜெகான் முபாரக் 60 ஓட்டங்களையும் தரங்க 50 ஓட்டங்களையும் மற்றும் சாமர சில்வா, ஆட்டமிழக்காமல் ஜெ.கே.சில்வா ஆகியோர் தலா 38 ஓட்டங்களையும் எடுத்தனர்.

பந்துவீச்சில் பதான் 2 விக்கெட்டுக்களையும் ஆர்.பி.சிங், முனாப் பட்டேல்,ஹர்பஜன் சிங், ஓஜா ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர். (5)




## அமெ. வீராங்கனைக்கு தங்கப்பதக்கம்

ஒலிம்பிக்கில் பெண்கள் 200 மீற்றர் பிரிஸ்டிரோக் நீச்சல் போட்டியில் அமெரிக்க வீராங்கனை சோனி ரெபக்கா தங்கப்பதக்கம் பெற்றதுடன் உலக சாதனையும் நிகழ்த்தினார்.இவர் பந்தய தூரத்தை 2 நிமிடம் 20.22 வினாடிகளில் கடந்தார்.




இதற்கு முன்பு அவுஸ்திரேலிய வீராங்கனை ஜோன்ஸ் 2 நிமிடம் 20.54 வினாடிகளில் கடந்ததே உலக சாதனையாக இருந்தது.

200 மீற்றர் ஆண்கள் பேக்ஸ்டிரோக் போட்டியில் அமெரிக்க வீரர் லோக்தே ரேயன் தங்கப் பதக்கம் பெற்றார். அவர் 1 நிமிடம் 53.94 வினாடிகளில் கடந்து உலக சாதனையும் நிகழ்த்தினார்.

இதற்கு முன்பு அவர் 1 நிமிடம் 54.32 வினாடிகளில் கடந்து உலக சாதனை நிகழ்த் தி இருந்தார். நேற்று அவரே தனது சாதனையை முறியடித்தார்.

நேற்று நடந்த பெண்கள் 100 மீற்றர் பிரிஸ்டைல் நீச்சல் போட்டியில் ஜேர்மனி வீரங்கனை ஸ்டெபன் பிரிட்டா 53.12 வினாடிகளில் கடந்து தங்க பதக்கம் பெற்றார்.

## கிளிநொச்சி...

மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிளிநொச்சி நாச்சிக்குடாப் பகுதியில் ஒரு கிலோமீற்றர் கிழக்குத் திசையில் அமைந்துள்ள விடுதலைப்புலிகளின் பதுங்குகுழிகளை இலக்கு வைத்தே இத் தாக்குதல் நடத்தப்பட்டத்ாகவும் விமானப் படைப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட இலக்கின் மீது உரிய முறையில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக விமானிகள் உறுதிப்படுத்தியதாகவும் அவர் தெரிவித்தார். (ஏ)

## ஈ.பி.டி.பி...

11.45 மணியளவில் மட்டக்களப்புக் கட்சிப் பணிமனையிலிருந்து நாவற்குடாவிற்குச் சென்று அரசியல் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் குறித்த உறுப்பினர் சுட்டுக் கொல்லப்பட்டதாக ஈ.பி.டி.பியினர் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாகக் காத்தான்குடிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ஏ-5)

## அரசு...

பலவந்தமாகத் தமது கட்டுப்பாட்டுப் பகுதியில் தடுத்து வைத்துள்ளது குறித்த சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

அங்குள்ள மக்களுக்கு உதவுவதற்கு அரசாங்கமும் போதிய நடவடிக்கைகளை எடுக்கவில்லை. இலங்கையில் நீண்ட காலமாகத் தொடரும் மோதலில் இராணுவ இலக்குகளை எட்டுவதற்காக இலங்கையில் போரில் ஈடுபடுகின்ற இரண்டு தரப்பினரும் பொதுமக்களை ஆபத்தில் விடுவதாக அவர் கூறியுள்ளார்.

இதேவேளை மையப் பகுதிக்குச் சென்று அங்கு என்ன நடக்கிறதென்பதை அறிய யாருக்கும் அனுமதி இல்லை என்பதுதான் இங்கு முக்கிய பிரச்சினை. இதனால்தான் சுயாதீனமான சர்வதேச கண்காணிப்பாளர்கள் அங்கு செல்ல வேண்டும் என்றும் ஊடகவியலாளர்கள் அங்கு செல்ல விதிக்கப்பட்டிருக்கின்ற தடை நீக்கப்பட வேண்டும் என்றும் நாங்கள் கோருகின்றோம் என்றார் யோலாண்டர் ஃபாஸ்டர். (ஏ-5)

# இடம்பெயர்ந்தவர்களுக்காக சட்டமூலம் அறிமுகமாகவுள்ளது

உள்நாட்டில் பல்வேறு காரணங்களின் அடிப்படையில் இடம்பெயர்ந்தவர்களைப் பாதுகாப்பதற்கான புதிய சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வருவதற்குத் தயாராகி வருவதாக இடர் முகாமைத்துவ மற்றும் மனித உரிமைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கான சட்ட மூல வரைபு தற்போது தயாராகி வருவதாக மனித உரிமைகள் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார். நாடு முழுவதிலும் சுமார் 5 இலட்சம் பேர் இடம்பெயர்ந்துள்ள நிலையில் அவர்களுக்கான நிவாரணங்களை வழங்கும்போது ஏற்படக் கூடிய குறைபாடுகளைத் தவிர்த்துக் கொள்வதே இந்தச் சட்ட மூலத்தின் நோக்கம் என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இடம்பெயர்ந்தவர்களுக்கான உதவிகள் அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்ற போதும் அவற்றை உரிய தரத்துடன் வழங்கப்பட வேண்டும் என்பதற்காக சட்ட மூலத்தின் ஒரு பகுதி மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார். (ஏ-5)

# புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள்கள் யாழ்.வந்தன

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையின் வினாத்தாள்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிற்கு விமானம் மூலமாகக் கொண்டுவரப்பட்டுள்ளன.

இந்த வினாத்தாள்கள் குடாநாட்டிலுள்ள பரீட்சை தொடர்பு நிலையங்களுக்கு நேற்று முன்தினம் விநியோகிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முறை ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து சுமார் 7 ஆயிரத்து 500 பரீட்சார்த்திகள் தோற்றவுள்ளனர்.

யாழ்ப்பாண மாவட்டத்திற்கென 81 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி மாவட்டத்திற்கு 27 பரீட்சை நிலையங்களும் முல்லைத்தீவு மாவட்டத்திற்கு 21 பரீட்சைநிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை புலமைப் பரிசில் பரீட்சைக்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாகப் பரீட்சை ஆணையாளர் அநுர எதிரிசிங்க தெரிவித்துள்ளார். (ஏ-5)

## முல்லைத்தீவில் அமைக்கப்...

இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்த விமான ஓடுபாதை இரணைமடுக் குளத்திற்கு அண்மையிலுள்ள ஓடுபாதையிலும் பார்க்க நீளமானதும் விசாலமானதுமாகக் காணப்படுவதாகவும் விடுதலைப்புலிகளிடம் தற்போதுள்ள விமானங்களுக்குத் தேவையான அளவிலும் பார்க்கப் பெரிதாகக் காணப்படுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

இலங்கை வான் படையின் ஆளில்லா வேவு விமானங்கள் இந்த ஓடுபாதை தொடர்பான தகவல்களைத் திரட்டியுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை கடற்புலிகள் தமது முக்கியமான போர்த் தளபாடங்கள் அனைத்தையும் வன்னியின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் முல்லைத்தீவுக்குக் கொண்டுபோய்ச் சேர்த்திருக்கின்றார்கள் என்றும் வன்னியின் மேற்குப் பகுதியில் இராணுவத்தின் படை நடவடிக்கைகள் மற்றும் ஆட்லறித் தாக்குதல்கள் அதிகரித்துள்ளதையடுத்தே அவர்கள் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளனர் என்றும் இலங்கைக் கடற்படை அதிகாரியை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி மேலும் தெரிவித்துள்ளது. (ஏ-5)

# மென்பந்து துடுப்பாட்டம்

(பருத்தித்துறை)

மாலிச்சந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் 15-வது ஆண்டு நிறைவையொட்டி நடாத்தப்பட்டு வந்த இருபது-20 மென்பந்து துடுப்பாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறுகின்றது.

இவ் இறுதிப் போட்டியில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து திருநாவலூர் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (ஏ-52)

## அழுக்க...

துப் புலிகள் பொருத்திய இந்த அழுக்க வெடியில், மாலை அப் பகுதியால் வந்த பவள் கவச வாகனம் சிக்கியது. தாக்குதலில் சேதமடைந்த வாகனத்தைப் பின்னர் சிறப்பு அதிரடிப் படையின் சாகமாம் படை முகாமிலிருந்து வந்த இன்னொரு பவள் கவச வாகனம் இழுத்துச் சென்றது.

படுகாயமடைந்த மூன்று படையினரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். இவ்வாறு மருத்துவமனைக்குச் சேர்க்கப்பட்ட படையினரில் இருவர் பின்னர் உயிரிழந்தனர். இன்னொருவர் ஆபத்தான நிலையில் இன்னும் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றார். (ஏ-5)

## மின்சாரம்...

இராணுவத்தினரின் பணிப்பின் பேரில் மின்மாற்றிக்கு இவர்கள் பாதுகாப்பு வேலி அமைத்துக் கொண்டிருந்தபோது இச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. படுகாயமடைந்த மூவரும் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை வட்டுக்கோட்டைப் பகுதியிலுள்ள மின்மாற்றிக்குப் பாதுகாப்பு வேலி அமைக்குமாறு அப் பகுதி மக்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் அதற்கான செலவையும் அப் பகுதி மக்களே ஏற்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டதாக பிரதேச தகவல்கள் தெரிவித்தன. (ஏ-5)




## தெற்கில் ஸ்திரமற்ற...

வன்னியைக் கைப்பற்றுவதற்கு இன்னமும் 32 கிலோமீற்றர் தூரமே உள்ளது. இந்த நிலையில் ஜே.வி.பியின் அரசியல் தேவைகளுக்காக மாணவர்களை பலிக்கடாவாக்கும் செயலுக்குப் பெற்றோர்கள் தடை விதிக்க வேண்டும்.

ஜே.வி.பிக்கு இன்று உயிர்ப் பலியே தேவையாகவுள்ளது என்றும் அவர் கூறினார். நாரஹேன்பிட்டியிலுள்ள அரசாங்கத் தகவல் திணைக்கள கேட்போர் கூடத்தில் நேற்று இடம்பெற்ற விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் தகவல் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் லக்ஷ்மன் யாப்பா அபேயவர்த்தன இதனைத் தெரிவித்தார். இங்கு அவர் மேலும் கூறியதாவது,

விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் யுத்தத்தில் எமது படையினர் வெற்றி கொண்டுள்ளதோடு முல்லைத்தீவையும் கைப்பற்றி வன்னியைக் கைப்பற்ற முன்னேறிக் கொண்டிருக்கின்றனர்.

இன்னமும் 32 கிலோமீற்றர் தூரமே மீதமாகவுள்ளது. இவ்வாறானதொரு நிலையில் படையினருக்கு மன வலிமையை வழங்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இதைவிடுத்துப் பயங்கரவாதிகளுக்குச் சார்பான நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது. ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவர்களை ஆர்ப்பாட்டப் பேரணிக்கு அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியமே தூண்டியுள்ளது.

இதன் பின்னணியில் ஜே.வி.பியே உள்ளது. பல்கலைக்கழக மாணவர்கள் வியாழக்கிழமை நடத்திய 12 கிலோமீற்றர் பேரணிக்குப் பொலிஸார் எந்தவிதமான தடையையும் விதிக்கவில்லை.

அப் பேரணி அதியுயர் பாதுகாப்பு வலயத்திற்குள் உட்புக முனைந்தபோது நுழைய வேண்டாம் என்றும் மாணவர்களின் மகஜரை ஏற்றுக் கொள்ள ஜனாதிபதியின் பிரதிநிதி தயாராக இருப்பதாகவும் எனவே ஐந்து பேரை அழைத்துச் செல்ல தயார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர் என்றார். (ஏ-5)

## இராணுவ...

வில்லை.

இதேவேளை இக் கைக்குண்டுத் தாக்குதலையடுத்து அப் பகுதியில் தீவிர சோதனை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஏ-5)

**புன்.வடக்கு இராஜராஜேஸ்வரி அம்மன் ஆலய பழைய வரவு செலவு அறிக்கையை ஒப்படைத்தலும் புதிய நிர்வாகத் தெரிவும்**

எதிர்வரும் ஞாயிறு (17.08.2008) அன்று ஒரு மணியளவில் ஆலய முன்றலில் கூட்டம் நடைபெறும் என்பதனை பழைய நிர்வாகத்தினர் அறிவிக்கின்றனர். சம்பந்தப்பட்ட அனைவரையும் இடம்பெயர்ந்துள்ள எமது ஊர் மக்களையும் சமுகமளிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்
பழைய நிர்வாகம்.

(1602)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.08.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.